# ஆசௌசாத்யாசார தர்பணம்

## (தீட்டு விவரம்)

(தொகுத்தவர்: ராமகிருஷ்ணன், கைப்பேசி: 8884334140)

ஒரு ஐம்பது, அறுபது வருஷங்களுக்கு முன்பெல்லாம், “தீட்டு” என்பதை பயந்து அனுஷ்டித்து வந்தனர். ஒரு பஹிஷ்டா ஸ்த்ரீ மூன்று நாட்கள் விலகியிருந்தாள். நான்காம் நாள், ஸ்னானம் செய்தாலும் சுத்தி ஒரளவுதான் என்று கருதினார்கள். இதை ஏன் செய்ய வேண்டும்? செய்யாவிட்டால்/பார்க்காவிட்டால் என்ன? என நினைப்பது முற்போக்கு என்று கருதியும், முன்னோர்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும் நாமாக தீர்மானித்து அப்பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டு விட்டோம். எது முற்போக்கு? நம்முடைய ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்வதா முற்போக்கு? பஹிஷ்டையின்பொழுது, அந்த ஸ்த்ரீக்கு முழு ஓய்வுத் தேவைப்படுகிறது. உடலுக்கு மட்டுமல்லாமல் மனதிற்கும் தேவைப்படுகிறது. ஆகவேதான், விலகி இருக்கச் செய்தார்கள். இப்பொழுது விலகியிருப்பது என்பதே கிடையாது. வயதில் பெரியவர்களும் எடுத்துச் சொல்ல முன் வருவதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள்: 1) பயம், 2) சொன்னாலும் கேட்கப் போவதில்லை.

அதேபோல பிறப்பு, இறப்பு தீட்டு விஷயங்களும் பலருக்கு தெரியவில்லை. அவற்றை அனுஷ்டிக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்வதில்லை. தெரிந்து கொள்ள விருப்பப்படுவதுமில்லை. இந்தத் தவறுகள் நமக்கும் மற்றும் நம்முடைய வம்சத்திற்கு நாசம் விளைவிக்கும் என்பதையும் உணர்வதில்லை.

பிறப்பு, இறப்பு முதலிய தீட்டு விஷயங்களை வெளியிட வேண்டும் என்பது என்னுடைய நெடுநாள் விருப்பம். முடிந்த வரை எளிமையாகவும், அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் தொகுத்து உள்ளேன்.

இன்றைய தலைமுறையினர்களுக்கு எடுத்துச் சொன்னால், புரிந்து கொள்ளும் பக்குவம் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நம்மிடம் பதில் சாஸ்த்திரத்தில் இருந்தாலும் நமக்குத் தெரியாத காரணத்தால் சொல்லமுடியவதில்லை. பெரியோர்கள் அனுஷ்டானத்தை விட்டதும் ஒரு காரணம். இந்த தலைமுறையினருக்கு புரிய வைப்பது ஒருபுறம். அடுத்த தலைமுறை எதுவும் தெரியாமல் போய் கொண்டிருக்கிறது. இது மற்றொருபுறம். இந்த இரண்டு தலைமுறையினருக்கு பாலமாக இப்போது 60 வயது கடந்த பெரியோர்கள். முதலில், நாம், நம்முடைய அனுஷ்டாங்களைச் செய்ய ஆரம்பித்து, முடிந்த அளவு அதன் பொருளையும் தெரிந்து கொண்டு செய்ய ஆரம்பித்தால், நாம் செய்வதைப் பார்த்து அவர்கள் தாங்களும் ஆரம்பிப்பார்கள்.

என்னுடைய இந்த யோசனையின் விளைவுதான், தங்களிடம் இருக்கும் இந்த சிறிய கையேடு. நான் படித்த பல புத்தகங்களிலிருந்தும், பெரியோர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட சாஸ்த்திரச் செய்திகளையும் இங்கே பகிர்கிறேன். இச்சிறு கையேட்டில் கூடுமானவரை எல்லா விஷயங்களையும் தொகுத்துக் கொடுத்து உள்ளேன். ஏதாவது விடுபட்டிருந்தால் தெரிவிக்கவும். தவறு இருந்தால் சுட்டிக் காட்டவும். இந்தக் கையேடு சாஸ்த்திர புஸ்தகங்களில் சொல்லியிருப்பதின்

அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. சம்பிராதயத்தின் அடிப்படையில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பிறப்புத் தீட்டு

| எண் | தீட்டுக்காரர் | தீட்டின் விபரம் | தீட்டின் கால அளவு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | பெற்ற தாய் | ஆண் குழந்தை பிறந்தால். | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 2. | பெற்ற தாய். | ஆண் குழந்தை பிறந்தால். | பிறந்தது முதல் 30 நாட்கள். | 30 நாட்கள் பாத்திரங்களைத் தொட சுத்தியில்லை. 31ம் நாளில் இருந்து தான் பாத்திரம் தொட சுத்தி. |
| 3. | பெற்ற தாய் | பெண் குழந்தை பிறந்தால். | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 4. | பெற்ற தாய் | பெண் குழந்தை பிறந்தால். | பிறந்தது முதல் 40 நாட்கள். | 40 நாட்கள் பாத்திரங்களைத் தொட சுத்தியில்லை. 41ம் நாளில் இருந்து தான் பாத்திரம் தொட சுத்தி. |
| 5. | பெற்ற தந்தை | ஆண் குழந்தை பிறந்தால். | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 6. | பெற்ற தந்தை | பெண் குழந்தை பிறந்தால். | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 7. | பத்து நாள் பங்காளிகள் (ஸபிண்டர்கள்). | ஆண் குழந்தை பிறந்தால். | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 8. | பிறந்த குழந்தையின் ஸஹோதரன். | ஸஹோதரன் அல்லது ஸஹோதரி பிறந்த பொழுது | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 9. | பிறந்த குழந்தையின் மாற்றாந்தாய் வயிற்று ஸஹோதரன் | மாற்றாந்தாய் வயிற்றறில் ஸஹோதரன் அல்லது ஸஹோதரி பிறந்த பொழுது. | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 10. | பிறந்த | அண்ணன் அல்லது | 10 | இது வ்ருத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழந்தையின் தகப்பன் வழி பெரியப்பா, சிற்றப்பா. | தம்பிக்கு குழந்தை பிறந்தால். | நாட்கள். | என்கிற பிறப்புத் தீட்டு. |
| 11. | பிறந்த குழந்தையின் ஒன்றுவிட்ட (தகப்பன் வழி) பெரியப்பா, சிற்றப்பா பிள்ளைகள். | பெரியப்பா அல்லது சிற்றப்பாவிற்கு குழந்தை பிறந்தால். | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 12. | பிறந்த குழந்தையின் தகப்பன் வழிப்பாட்டன். (பிதா மகன்). | தன் பிள்ளைக்கு பிள்ளை அல்லது பெண் பிறந்தால். | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 13. | பிறந்த குழந்தையின் தகப்பன்வழிப் பாட்டனின் சகோதரர்கள் (பெரிய தாத்தா, சிறிய தாத்தா. | தன் உடன் பிறந்தவனுக்கு பேரன் அல்லது பேத்தி பிறந்தால். | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 14. | பிறந்த குழந்தையின் தகப்பன்வழிப் பாட்டனின் மாற்றாந்தாய் வயிற்று சகோதரன் | தன் உடன் பிறந்தவனுக்கு பேரன் அல்லது பேத்தி பிறந்தால். | 10 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 15. | பிரசவித்தவளின் தந்தை அதாவது பிறந்த குழந்தையின் தாய் வழிப் பாட்டன். | பெண் பிரசவித்தால் | 3 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 16. | பிரசவித்தவளின் தாய் அதாவது பிறந்த குழந்தையின் தாய் வழிப் பாட்டி. | பெண் பிரசவித்தால் | 3 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 17. | பிரசவித்தவளின் சகோதரன். | சகோதரி பிரசவித்தால் | 3 நாட்கள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. இது ப்ராசீனாசாரம், ஒரு நாள் என்றும் சிலர் சொல்வர். |
| 18. | பிரசவித்தவளின் பெரியப்பா, சிற்றப்பா, அம்மான். | சகோதரன் பெண் அல்லது மருமாள் பிரசவித்தால் | 1 நாள். | இது வ்ருத்தி என்கிற பிறப்புத் தீட்டு. |
| 19. | பிரசவித்தவளின் | பெண்ணின் பெண் | 1 நாள். | இது வ்ருத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | தாய்வழிப்பாட்டன் (அதாவது பிறந்த குழந்தையின் தாயாரின் தாய்வழிப்பாட்டன் . | பிரசவித்தால். | | என்கிற பிறப்புத் தீட்டு. |

| குறைப் பிரசவம் ஏற்பட்டால் அப்போதைய தீட்டின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| **எண்.** | **ஒரு ஸ்த்ரீக்கு குறைப்பிரசவம் ஏற்பட்டால்** | **தாய்** | **தகப்பன்** | **பத்து நாட்கள் பங்காளிகள்** | **குறிப்பு** |
| 1 | 3 மாதத்தில். | 3 நாட்கள். | இல்லை | இல்லை | கலைந்து விழுதல் |
| 2. | 4 மாதத்தில் | 4 நாட்கள் | ஸ்னானம் மட்டும். | இல்லை | கலைந்து விழுதல் |
| 3. | 5 மாதத்தில். | 5 நாட்கள். | ஸ்னானம் மட்டும். | ஸ்னானம் மட்டும். | கலைந்து விழுதல் |
| 4. | 6 மாதத்தில். | 6 நாட்கள் | ஸ்னானம் மட்டும். | ஸ்னானம் மட்டும். | கலைந்து விழுதல் |
| 5. | 5 அல்லது 6 மாதம். | 5 நாட்கள். 6 நாட்கள். | 3 நாட்கள். 3 நாட்கள். | 3 நாட்கள். 3 நாட்கள். | கலைந்து பிண்டமாக விழுதல் |
| 6. | 6 மாதத்திற்கு மேலானால். | 10 நாட்கள். | 10 நாட்கள். | 10 நாட்கள். (குழந்தை ஆணாக இருந்தால் மட்டும்.) | மூன்று நாட்கள் பங்காளிகளுக்கு 3 நாட்கள் தீட்டு .(குழந்தை ஆணாக இருந்தால் மட்டும்.) |

## இரட்டை பிரசவ தீட்டு விஷயம்

1. இரண்டு குழந்தைகளும் ஆணாக இருந்தால், ஆண் குழந்தைக்கு சொல்லியுள்ளபடி தீட்டு காக்க வேண்டும்.
2. இரண்டு குழந்தைகளும் பெண்ணாக இருந்தால் பெண் குழந்தைக்கு சொல்லியுள்ளபடி தீட்டு காக்க வேண்டும்.
3. ஒரு குழந்தை ஆணாகவும், ஒன்று பெண்ணாகவும் இருந்தால், ஆண் குழந்தைக்கு சொல்லியுள்ளபடி தீட்டு காக்க வேண்டும்.
4. **குறிப்பு: (1)** மேலே குறிப்பிட்ட தீட்டுள்ள நபர்களில் ஆண்களுக்கு உள்ள தீட்டு, அவர் விவாஹமானவர் என்றால் அவர் மனைவிக்கும் உண்டு.
5. **குறிப்பு:(2)** பிறப்புத் தீட்டை, தீட்டின் காலம் கடந்து கேட்டால் தீட்டு கிடையாது. பிதாவுக்கு ஸ்னானம் மட்டும் உண்டு.
6. **விஷேச விதி:** உபநயனமில்லாதவனுக்கும், விவாஹமாகாத பெண்களுக்கும், ப்ரஹ்மசாரி (உபநயனம் நடந்து விவாஹம் ஆகாதவன்) ஆகியவர்களுக்கும் தீட்டு கிடையாது.

7. மேற்படி வ்ருத்தி தீட்டு, மேற்படி நபர்களுக்கு அவர்கள் வீட்டில் மேற்படி ஸ்த்ரீ பிரஸவித்தாலும், அவர்களின் பணச் செலவில் பிரஸவித்தாலும் மட்டுமே தீட்டு ஏற்படும்; மற்றபடி தீட்டு இல்லை என்றும் சிலர் கூறுவர்.
8. இருந்தாலும், பிரசவித்தவளின் தாய், தந்தை, ஸகோதரன் இவர்களுக்கு, அவர்களின் வீட்டில் பிரஸவித்தாலும், இல்லாமல் போனாலும் அவர்களின் திரவியம் உபயோகப்பட்டாலும் இல்லாவிட்டாலும் மேலே சொன்னபடி தீட்டு உண்டு என்று ப்ராசீனர்களின் அபிப்பிராயம்.

## இறப்புத் தீட்டு

| வரிசை எண். | தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | பிள்ளை | தாய், தகப்பன் இறந்தால். | 10 நாட்கள். | இது இறப்புத் தீட்டு. 11, 12 ம் நாள் க்ரியயை நடக்கும்பொழுது மட்டும் தீட்டு. |
| 2. | ஸபிண்டர்களுக்கு (10 நாட்கள் பங்காளிகள்). | ஸபிண்டர்கள் (10 நாட்கள் பங்காளிகள் ம்ரித்தால்). | 10 நாட்கள். (9-வது தினத்திற்குள் எப்போது கேட்டாலும், கேட்ட தினம் முதல் மிகுந்த தினம் வரை). | தாயாதர் என்பதால். |
| 3. | பிதாவுக்கு. | ஆண் குழந்தை அல்லது பெண் குழந்தை பிறந்த 10 நாட்களுக்குள் இறந்தால். | 10 நாட்கள். | இது பிறப்புத் தீட்டோடு போய்விடும். இறப்புத் தீட்டு தனியாகக் கிடையாது. |
| 4. | ஸஹோதரனுக்கு (விவாஹம் ஆனவன் என்றால்). | தனக்கு ஸகோதரன் பிறந்து 10 நாட்களுக்குப் பின் இறந்தால், ஸஹோதரி பிறந்து 10 நாட்களுக்குப் பின், விவாஹத்திற்கு முன் எப்போது இறந்தாலும் (இது மாற்றாந்தாய் வயிற்றில் | 10 நாட்கள். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிறந்தவர்களுக்கும் பொருந்தும். | | |
| 5. | ஒருவருக்கு | 10 நாட்கள் பங்காளியின் ஆண் குழந்தை ஆறு வயதுக்குப் பின் இறந்தால். | 10 நாட்கள். | உபநயனம் ஆகாவிட்டாலும் இது பொருந்தும். |
| 6. | பெண் வயிற்றுப் பேரனுக்கு. | தாயின் தந்தை அல்லது தாயின் தாய் இறந்தால். | 3 நாட்கள். | |
| 7. | மருமானுக்கு. | தாயின் சகோதரன் அதாவது மாமா இறந்தால். | 3 நாட்கள். | |
| 8. | மாப்பிள்ளைக்கு | மாமனார், மாமியார் இறந்தால். | 3 நாட்கள். | |
| 9. | ஒரு ஸ்த்ரீயின் தமக்கை அல்லது தங்கையின் பிள்ளைக்கு. | சித்தி அல்லது பெரியம்மா இறந்தால். | 3 நாட்கள். | |
| 10. | மருமானுக்கு. | அத்தை இறந்தால். | 3 நாட்கள். | |
| 11. | ஸஹோதரனுக்கு | விவாஹாமான ஸஹோதரி இறந்தால். | 3 நாட்கள். | |
| 12. | தகப்பனுக்கு. | விவாஹமான பெண் இறந்தால். | 3 நாட்கள். | |
| 13. | மாமாவுக்கு. | ஸஹோதரியின் பிள்ளை (உபநயனமனவன்) அதாவது மருமான் இறந்தால். | 3 நாட்கள். | |
| 14. | பாட்டனுக்கு | பெண் வயிற்றுப் பேரன் இறந்தால். | 3 நாட்கள். | உபநயனம் ஆகியிருந்தால். |
| 15. | ஒருவருக்கு. | மூன்று நாளைய பங்காளி இறந்தால். | 3 நாட்கள். | |
| 16. | ஸ்வீகாரம் போன ஒருவருக்கு. | ஜனக பிதா/ தாய் ( அதாவது பெற்ற தகப்பன்/தாய்.) இறந்தால் | 3 நாட்கள். | |
| 17. | ஒருவருக்கு | 10 நாளைய பங்காளியின் பிள்ளை 3 முதல் 6 வயதிற்குள் இறந்தால், | 3 நாட்கள். | |
| 18. | அம்மான் சேய்க்கு. | அத்தை பிள்ளை/பெண் (அதாவது (அத்தான்/அத்தங் | 1 ½ நாட்கள். | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காள்) இறந்தால். | | |
| 19. | அத்தானுக்கு | மாமா பிள்ளை அல்லது பெண் இற்ந்தால். | 1 ½ நாட்கள். | |
| 20. | மாமாவுக்கு | 3 வயதுக்கு மேல் உபநயனம் ஆகாத மருமான் அல்லது மருமாள் இறந்தால். | 1 ½ நாட்கள். | |
| 21. | ஒருவருக்கு. | தாயின் ஸகோதரி பிள்ளை/பெண் இறந்தால். | 1 ½ நாட்கள். | |
| 22. | ஒருவருக்கு | பெரியப்பா, சிற்றப்பா பெண் இறந்தால். | 1 ½ நாட்கள் | விவாஹமான வள்). |
| 23. | பாட்டனுக்கு. | பிள்ளையின் பெண் இறந்தால், பெண்ணின் பெண் இறந்தால், பெண்ணின் பிள்ளை 3 வயதுக்கு மேற்பட்டு ஆனால், உபநயனமாகாமல் இறந்தால். | 1 ½ நாட்கள் | |
| 24 | ஒருவருக்கு | தன் மாற்றாந்தாய் வழியில் மாமா, சித்தி, பெரியம்மா, ஸஹோதரி பிள்ளை, ஸஹோதரி பெண், பெண்ணின் பிள்ளை, பென்ணின் பெண் இறந்தால். | 1 நாள் | |
| 25. | ஒருவருக்கு. | மைத்துனன் இறந்தால் ( மனைவியின் ஸகோதரர்). | 1 நாள். | |
| 26. | ஒருவருக்கு. | தந்தையின் மாற்றாந்தாய்க்குப் பிறந்த ஸஹோதரன் பெண், ஸகோதரி, அவரின் பெண், பிள்ளை இறந்தால். | 1 நாள். | |
| 27 | ஒருவருக்கு. | மாற்றாந்தாயின் தாய், தகப்பனார் இறந்தால், மாற்றந்தாயுடன் பிறந்தவன் பெண் | 1 நாள். | சிலர் இதைப் பின் பற்றுகின்றனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறந்தால். | | |
| 28. | ஒருவருக்கு. | 3தலைமுறைக்குட் பட்ட 2 முதல் 6 வயதுள்ள பங்காளி பெண் இறந்தால். | 1 நாள். | |
| 29. | ஒருவருக்கு. | பத்னீ இறந்த பின் குழந்தைகளும் இல்லாமல், மாமனார், மாமியார் இறந்தால். | 1 நாள். | |
| 30. | ஒருவருக்கு. | 10 நாள் பங்காளியின் 6 மாதம் முதல் 2 வயது உள்ள வரையுள்ள பிள்ளை/பெண் இறந்தால். | 1 நாள். | |
| 31. | மாமனாருக்கு. | மாப்பிள்ளை இறந்தால். | ஸ்நானம் மட்டும். | |
| 32. | மருமானுக்கு. | அத்தை புருஷன் இறந்தால். | ஸ்நானம் மட்டும். | |
| 33. | ஒருவருக்கு. | மைத்துனி இறந்தால். | ஸ்நானம் மட்டும். | |
| 34. | ஒருவருக்கு. | ஷட்டகர், அத்தான் மனைவி, அத்தான் மதனி, அம்மான் சேய் மனைவி, சிறிய தாயாரின் பிள்ளையின் மனைவி ஆகியவர் இறந்தால் | ஸ்நானம் மட்டும். | |

## பக்ஷிணி எனப்படும் 1 ½ நாள் தீட்டின் விளக்கம்:-

1. பக்ஷிணி (1 ½ நாள்) என்பது 90 நாழிகை (அதாவது 36 மணி நேரம்) காலம். இது இரண்டு இரவும் ஒரு பகலும் அல்லது இரண்டு பகலும் ஒரு இரவும் சேர்ந்த காலம். பகலில் போஜனம் செய்யாமல் இருந்தால் மட்டுமே தீட்டு கழியும். போஜனம் செய்தால் மறுநாள் உதயம் வரைத் தீட்டு உண்டு.
2. முதல்நாள் பகலில் மரணம் ஏற்பட்டு மறுநாள் பகலில் ஒருவன் சாப்பிட்டபின் இந்த விஷயம் தெரியவந்தால், மிகுந்த காலத்தில் சாப்பிடாமல் இருந்து அஸ்தமனம் ஆன பிறகு ஸ்னானம் செய்தால் தீட்டு போய்விடும்.

# ஸ்த்ரீகளுக்கு மட்டுமான இறப்புத் தீட்டு.

| வரிசை எண் | தீட்டுக்காரர் | தீட்டின் விவரம். | தீட்டின் காலம். |
|---|---|---|---|
| 1. | ஒரு பெண்ணுக்கு | உபநயனமான ஸஹோதரன் இறந்தால். | 3 நாட்கள் |
| 2. | ஒரு பெண்ணுக்கு | உபநயனமான மருமான் (ஸஹோதரன் பிள்ளை) இறந்தால். | 3 நாட்கள் |
| 3. | ஒரு பெண்ணுக்கு | ஸகோதரி பிள்ளை இறந்தால். | 3 நாட்கள் |
| 4. | ஒரு பெண்ணுக்கு | மாற்றந்தாய் இறந்தால். | 3 நாட்கள் |
| 5. | ஒரு பெண்ணுக்கு | தனது ஸஹோதரி இறந்தால். | 1 ½ நாட்கள். |
| 6. | ஒரு பெண்ணுக்கு | தகப்பனாரின் ஸஹோதரன் இறந்தால். | 1 ½ நாட்கள். |
| 7. | ஒரு பெண்ணுக்கு | தாயின் ஸஹோதரி இறந்தால். | 1 ½ நாட்கள். |
| 8. | ஒரு பெண்ணுக்கு | மாமா, அத்தை இறந்தால். | 1 ½ நாட்கள். |
| 9. | ஒரு பெண்ணுக்கு | சிற்றப்பா, பெரியப்பா, இவர்களது பிள்ளைகள், மாமா பிள்ளைகள், அத்தை பிள்ளைகள் இறந்தால். | 1 ½ நாட்கள். |
| 10. | ஒரு பெண்ணுக்கு | பெரியப்பா, சிற்றப்பா இவர்களது பெண்கள், மாமா, அத்தை பெண்கள் இறந்தால். | 1 ½ நாட்கள். |
| 11. | ஒரு பெண்ணுக்கு | தகப்பன் வழிப்பாட்டன், பாட்டி, தாய் வழிப்பாட்டன், பாட்டி, தமையன், தம்பி இவர்களது | 1 ½ நாட்கள். |

| | | | |
|---|---|---|---|
| | | பெண் (மருமாள்) இறந்தால். | |
| 12. | ஒரு பெண்ணுக்கு | மாற்றாந்தாயின் ஸஹோதரன், ஸஹோதரி, மாற்றாந்தாயின் பிள்ளை,பெண், மாற்றாந்தாயின் பேரன், பேத்தி, தன் தகப்பனாரின் மாற்றாந்தாயின் பிள்ளை, பெண், அவர்களின் பிள்ளை, பெண், தன் மாற்றாந்தாயின் தாய், தகப்பன் இவர்கள் இறந்தால். | 1 நாள் மட்டும். |
| 13. | ஒரு பெண்ணுக்கு | மாமி, அத்தை புருஷன், ஸஹோதரி புருஷன் இறந்தால். | ஸ்னானம் மட்டும். |

**குறிப்பு:-** பொதுவாக 1 ½ நாட்கள் தீட்டு யாருக்கு யார் (புருஷன் அல்லது ஸ்த்ரீ) மரணத்தால் ஏற்ப்பட்டதோ அது அவர்களுடன் முடிந்து விடும். அந்த புருஷன் அல்லது ஸ்த்ரீயின் மனைவி அல்லது கணவர் இறந்தால் ஸ்னானம் மட்டுமே.

**உதாரணம்:**- அம்மான் சேய்க்கு அத்தை பெண் இறந்தால் 1 ½ நாட்கள் மட்டும். ஆனால் அத்தை பெண்ணின் கணவன் இறந்தால் ஸ்னானம் மட்டுமே. இது புருஷர்கள் விஷயம்.

ஸ்தீகளுக்கு பர்த்தாவுக்கு எந்தெந்த தீட்டுக்கள் உண்டோ அவை அப்படியே அவர்களுக்கும் உண்டு.

## தீட்டுச் சேர்க்கை

ஒரு தீட்டை அநுஷ்டிக்கும் பொழுது இன்னொரு தீட்டு நேர்ந்தால், அதை அநுஷ்டிக்கும் விதம் எப்படி என்பது பற்றிய விபரங்க்கள்.

## பிறப்பு தீட்டில் பிறப்புத் தீட்டு

1) 10-நாள் தீட்டின் இடையில் இன்னொரு 10-நாள் பிறப்புத் தீட்டு வந்தால் அது முதல் தீட்டு முடியும் போதே போய்விடும்.

2) ஆனால், 10-நாள் பிறப்புத் தீட்டு காக்கும் பொழுது 10-ஆவது நாளின் இரவில் வேறொரு 10-நாள் தீட்டு வந்தால் அதிகப்ப்டியாக 2 நாள் தீட்டு உண்டு.
3) 10-நாள் பிறப்புத்தீட்டு காக்கும் பொழுது 10 ஆவது நாள் இரவு ஸமானமான பிற்ப்புத்தீட்டு கேட்க நேர்ந்தால் 10-ஆவது நாளின் முதல் மூன்று யாமத்திற்குள் கேட்டால் அதிகப்படியாக இரண்டு நாட்கள் தீட்டு உண்டு. 10-ஆவது நாளின் இரவு நான்காவது யாமம் அல்லது அருணோதயத்தில் கேட்டால் அதிகபடியாக 3 நாட்கள் தீட்டு உண்டு.
4) ஒரு பிறப்புத்தீட்டு காத்துக்கொண்டிருக்கும் பொழுது தனக்குக் குழந்தைப் பிறந்தால், தகப்பனுக்குக் குழந்தை பிறந்தது முதல் 10- நாள் தீட்டு உண்டு.
5) ஆனால், தனக்கு குழந்தை பிறந்து தீட்டு காத்துக்கொண்டிருக்கும் பொழுது, வேறொரு பிறப்புத்தீட்டு 10-ஆவது நாளின் இரவில் நேர்ந்தாலும் அது முதல் தீட்டோடு போய்விடும்.

## பிறப்புத் தீட்டில் இறப்புத் தீட்டு

1) பிறப்புத் தீட்டை விட இறப்புத் தீட்டு பலமானது. பிறப்புத் தீட்டோடு இறப்புத் தீட்டு போகாது. ஆனால், இறப்புத் தீட்டோடு பிறப்புத் தீட்டுப் போய்விடும்.
2) உதாரணத்திற்கு, 10-நாள் இறப்புத் தீட்டின் இடையில் 10-நாள் பிறப்புத் தீட்டு நேர்ந்தால் இரண்டுமே இறப்புத் தீட்டு முடியும் பொழுது போய்விடும். ஆனால், குழந்தையின் தகப்பனுக்கு மட்டில் பிறந்தது முதல் 10-நாள் தீட்டு உண்டு.
3) தனக்கு குழந்தை பிறந்து 10-நாள் தீட்டுக்காக்கும் பொழுது, பங்காளிகள் இறந்ததானால் தீட்டு வந்தால், அது பிறப்புத் தீட்டோடு போய்விடும்.
4) தன் குழந்தையின் பிறப்புத் தீட்டின் பொழுது அக்குழந்தையே இறந்தாலும் பிறப்புத் தீட்டின் பொழுது எல்லாத் தீட்டும் போய்விடும்.
5) தன் குழந்தை 10-ஆவது நாளில் இறந்தால் கூடுதலாக 2 நாள் தீட்டு காக்க வேண்டும்.
6) தன் குழந்தை 10-ஆவது நாளின் இரவின் முடிவில் இறந்தால் கூடுதலாக 3 நாள் தீட்டுக் காக்க வேண்டும்.
7) தன் தாய் அல்லது தகப்பனுக்கு தீட்டுக்காக்கும் பொழுது, தனக்குக் குழந்தை பிறந்தால் அந்தப் பிறப்புத் தீட்டு குழந்தையின் தகப்பனுக்கு தன் தாய் அல்லது தகப்பன் இறப்புத் தீட்டோடு போய்விடும். குழந்தையின் தாய்க்கு மட்டும் குழந்தை பிறந்தது முதல் 10 நாட்கள் தீட்டு உண்டு. இந்த சமயத்தில் தாய் அல்லது தகப்பன் கர்மாவை செய்பவர் 11ம் நாள் வரை நடத்தி நிறுத்திவிட வேண்டும். மனைவிக்குப் பிறப்புத் தீட்டு கழிந்த பின் நாள் பார்த்து 12-ம் நாள் கர்மாவைச் செய்ய வேண்டும்.
8) பங்காளி இறப்புத்தீட்டின் இடையில் சிசு பிறந்தால் தாய் தகப்பனுக்கு மட்டில், சிசு பிறந்தது முதல் 10 நாட்கள் தீட்டு உண்டு.
9) பிறப்புத் தீட்டுள்ள பங்காளிகளுக்கு 10 நாட்களுக்குள் அந்த சிசு மரித்தால் இறப்புக்காக கூடுதலான தீட்டு இல்லை.

## இறப்புத் தீட்டில் இறப்புத் தீட்டு

1) 10-நாட்கள் தீட்டில் வேறோரு 10-நாட்கள் தீட்டு வந்தால் முந்தைய தீட்டோடு பிந்தைய தீட்டும் போய்விடும்.
2) 3-நாட்கள் தீட்டில் 10-நாட்கள் தீட்டு வந்தாலும், 10-நாட்கள் உள்ள தீட்டில் 3-நாட்கள் தீட்டு வந்தாலும், 10-நாட்கள் தீட்டில் முடிவில்தான் தீட்டு கழியும்.
3) பங்காளிகளுக்கான மரணத்தீட்டின் இடையே, மாதா, பிதாக்கள் இறந்தால், பிள்ளைக்கு 10-நாடகள் தீட்டு உண்டு.
4) இதே போல் பத்னி இறந்தால் பர்த்தாவுக்கும், பர்த்தா இறந்தால் பத்னிக்கு, பிள்ளை அல்லது பெண் இறந்தால் தாய், தகப்பனுக்கும், 10-நாட்கள் பூர்ணமாகத் தீட்டு உண்டு.
5) 10-நாட்கள் இறப்புத் தீட்டில், 10-வது நாள் இரவில் வேறொரு 10-நாட்கள் தீட்டு நேர்ந்தால் முதலில் வந்த தீட்டு கழிந்த பிறகு கூடுதலாக 2-நாட்கள் மட்டும் தீட்டு உண்டு.
6) 10-நாட்கள் இறப்புத் தீட்டில், 10-வது நாள் இரவு கடைசி ஜாமத்தில் அல்லது அருணோதயத்தில் வேறொரு 10-நாட்கள் தீட்டு சேர்ந்தால் முதல் தீட்டுக்குப்பின் கூடுதலாக் 3- நாட்கள் தீட்டு உண்டு.
7) குறைவான நாட்கள் இறப்புத் தீட்டில் அதிகமான நாடகள் காக்க வேண்டிய தீட்டுப் போகாது.
8) தாயார் மரணத்தில் 10-நாட்கள் தீட்டின் இடையே தகப்பனார் மரித்தால் பின் வந்த தீட்டை 10-நாட்கள் அநுஷ்ட்டிக்க வேண்டும்.
9) பிதா மரணத்தின் 10-நாட்கள் தீட்டின் இடையே தாயார் மரித்தால் முந்தய தீட்டிற்குப் பிறகு 1 ½ நாட்கள் தீட்டு உண்டு.

## அதிக்ரந்தாசௌசம் (காலங்கடந்து கேட்ட தீட்டு)

1) 10-நாட்கள் இறப்புத்தீட்டை இறந்த 10 நாட்களுக்குப் பிறகு 3 மாதங்களுக்குள் கேட்டால் 3 நாட்கள் தீட்டு.
2) 10-நாட்கள் இறப்புத்தீட்டை 3 மாதத்திற்குப் பிறகு 6 மாதங்களுக்குள் கேட்டால் 1 ½ நாட்கள் தீட்டு உண்டு.
3) 10-நாட்கள் இறப்புத் தீட்டை 6 மாதத்திற்குப் பிறகு 1 வருடத்திற்குள் கேட்டால் 1 நாள் தீட்டு உண்டு.
4) 10-நாட்கள் தீட்டை 1 வருடத்திற்குப் பிறகு எப்போது கேட்டாலும் ஸ்னானம் மட்டும் தான்.
5) 3-நாட்கள் தீட்டை 3 நாட்களுக்கு மேல் 10 நாட்களுக்குள் கேட்டால் 1 நாள் தீட்டு உண்டு.
6) 3-நாட்கள் தீட்டை 10 நாட்களுக்குப் பிறகு எப்போது கேட்டாலும் ஸ்னானம் மட்டும்.
7) 1 ½ நாட்கள் தீட்டை 1 ½ நாட்களுக்கு மேல் 10 நாட்களுக்குள் கேட்டால் ஒரு காலம் தீட்டு. அதாவது பகலில் கேட்டால் அஸ்தமனம் வரையும், இரவில் கேட்டால் உதயம் வரையிலும் தீட்டு உண்டு. பிறகு கேட்டால் ஸ்னானம் மாத்திரம்.
8) 1 நாள் தீட்டுக்கு அதிக்ராந்தாசௌசம் கிடையாது. காலம் கடந்து கேட்டால், ஸ்னானம் உண்டு.

9) தாய் தகப்பன் மரணத்தில் மூத்த பிள்ளைக்கும், பர்த்தாவின் மரணத்தில் பத்னிக்கும் எப்பொழுது கேட்டாலும், அதுமுதல் 10 நாட்கள் தீட்டு உண்டு.
10) தாய், தகப்பன் மரணத்தில் மூத்த பிள்ளையால் கர்மா நடந்த பிறகு இரண்டாவது முதலான பிள்ளைகள் ஒரு வருஷத்திற்குள் கேட்டால் 10-நாட்கள் தீட்டு உண்டு. ஒரு வருஷத்திற்கு மேல் கேட்டால் 3-நட்கள் தீட்டு.
11) 10-நாட்கள் தீட்டை 10வது நாள் இரவிலும், 3-நாட்கள் தீட்டை 3வது நாள் இரவிலும் அல்லது 4வது நாள் முதல் 10ம் நாள் வரையில் இரவில் கேட்டால் மறுநாள் தர்ப்பணம் செய்ய வேண்டியவர்கள் (தகப்பன் இல்லாதவர்கள்) தர்ப்பணம் செய்வதனால் தர்பபண தினத்தில் தீட்டு உண்டு. அதிக்ராந்தமானலும் தர்ப்பண தினத்தில் அசுத்தி உண்டு.
12) தகப்பனார் இல்லாதவரே தர்ப்பணம் பண்ண வேண்டும். இரவில் தர்ப்பணம் செய்யக்கூடாது.

## வபனம் (க்ஷௌரம்)

1) தஹனம் செய்பவன் அதற்கு அங்கமான வபனம் செய்து கொள்ள வேண்டும்.
2) தஹனாங்க வபனம் எல்லா பிள்ளைகளும் செய்து கொள்ள வேண்டும்.
3) இரவில் செய்து கொள்ள வேண்டியிருந்தால் ஜ்யேஷ்டன் மட்டும் அப்போது செய்து கொள்ள வேண்டும். மற்றவர்கள் மறுநாள் செய்து கொள்ள வேண்டும்.
4) 3 நாட்கள் தீட்டுக்காரர்களான ஸமானோதர்களுக்கு வபனம் கிடையாது.
5) தன் தப்பனார் உயிரோடு இருப்பவர்களுக்கு யார் இறந்தாலும் வபனம் கிடையாது.
6) 10-நாட்கள் தீட்டுக்காரர்கள் 10-வது நாளிலும், பங்காளியல்லாத 3- நாட்கள் தீட்டுக்காரர்கள் 3-வது நாளிலும் வபனம் செய்து கொள்ள வேண்டும்.
7) பத்து நாட்கள் பங்காளிகள் விஷயத்தில், இறந்தவர் தன்னைவிட வயதில் பெரியவரானால் வபனம் உண்டு.
8) மாமா, அத்தை, மாமி, சித்தி இவர்கள் விஷயத்திலும் இறந்த அவர்கள் தன்னைவிட வயதில் மூத்தவரானால் வபனம் உண்டு.
9) தாயின் தந்தை, தாயின் தாய், பெரியம்மா, ஸீமந்த புத்ரியான ஸஹோதரி ஆகியவர் விஷயத்திலும் வபனம் உண்டு.
10) ஸ்வீகாரம் போனவருக்கு தன்னைப் பெற்ற தாய், தந்தை விஷயத்தில் வபனம் உண்டு.
11) தகப்பன் வழி சித்தப்பா, மாமா, மாமி, மாமானார், மாமியார், அத்தை, சித்தி, மாற்றாந்தாய், தகப்பன் வழி சித்தி, மதனி ஆகியோருக்கு க்ருத்யம் செய்தால், இறந்த அந்த நபர், தனக்கு வயதில் சிறியவரானாலும் வபனம் உண்டு.
12) 11ம் எண்ணில் உள்ள நபர்கள் விவாஹம் ஆகாத பெண்கள், உபநயனம் ஆகாத ஆண்களாக இறந்தால் க்ருத்யம் செய்தாலும் வபனமில்லை. தஹனாங்க வபனமும் இல்லை.
13) 3-நாள் பங்காளிகள் விஷயத்தில் வபனம் இல்லை. க்ருத்யம் செய்தால், இறந்தவர் வயதில் மூத்தவராக இருந்தால் வபனம் உண்டு.
14) தீட்டைக் காலம் கடந்து கேட்டால் வபனம் இல்லை.

15) தீக்ஷையில் வபனம் இல்லை. ஆனால், தாய், தந்தை இறந்தால் தீக்ஷையிலும் வபனம் உண்டு.
16) வெள்ளிகிழமைகளில் வபனம் செய்துக்கொள்ளக் கூடாது. அதற்கு முதல் அல்லது மறுநாள் செய்து கொள்ளலாம்.
17) ஆனால், தாய், தகப்பனார் விஷயத்தில் வெள்ளிக்கிழமையானாலும் வபனம் உண்டு. இது ஆசௌச தீட்டுக்கு மட்டும்தான் பொருந்தும்.
18) இறப்பு காரணமாக வெள்ளிக்கிழமையில் வபனம் பண்ணிக் கொள்ள வேண்டிய தீட்டு என்று தெரிய வந்தால், மறுநாள் நிஷேதமில்லாத நாளாக இருந்தால், மறுநாள் செய்து கொள்ளலாம், நிஷேதமான நாட்களாக இருந்தால் வபனம் கிடையாது.
19) அனேக தீட்டுகள் சேர்ந்தாலும் வபனம் ஒன்றே.
20) வபனம் செய்து கொள்ள வேண்டிய தீட்டை, வபனம் செய்து கொள்ள வேண்டிய தினத்தில், சாப்பிட்ட பிறகு கேட்டால் வபனம் பண்ணிக் கொள்கிற வழக்கம் இல்லை.
21) ஸபிண்டீகரணத்துக்குப் பிறகு தீக்ஷை அநுஷ்டித்தால் நல்லது; இல்லாவிட்டால் தோஷமில்லை.
22) மாமனார்,மாமியர் இறந்தால் ஒருநாள் தீட்டு காத்த பிறகு மாப்பிள்ளைக்கு வபனம் கிடையாது.
23) ஸந்ததியும் இல்லாமல், மனைவியும் இறந்த பிறகு மாமனார், மாமியார் இறந்தால் ஒரு நாள் தான் தீட்டு. அப்படி ஒரு நாள் தீட்டு காத்த பிறகும் மாப்பிள்ளைக்கு வபனம் கிடையாது.
24) இறந்தவர் தனக்கு வயதில் மூத்தவரா இல்லையா என்ற சந்தேகம் ஏற்பட்டால் வபனம் செய்து கொள்வது நல்லது.

### தீக்ஷையைப் பற்றி ஒரு குறிப்பு:

1) **கர்பப தீக்ஷை**:- பத்னியின் முதல் கர்ப்பத்தின்போது 4 வது மாதம் முதலும், இரண்டாவது கர்ப்பத்தின் போது 5 ம் மாதம் முதலும், மற்ற கர்ப்பத்துக்கு 7 வது மாதம் முதலும் புருஷன் வபனம் செய்து கொள்வதில்லை. இது கர்ப்ப தீக்ஷை.
2) **உபநயன தீக்ஷை:-** உபநயனம் ஆன பிறகு 1 வருஷம் அல்லது 6 மாதம் வபனம் பண்ணிக் கொள்ளாமல் இருப்பது உபநயன தீக்ஷை**.**
3) **பித்ரு தீக்ஷை**:- மாதா பிதாக்களின் மரணத்திற்கதுப் பிறகு 1 வருஷம் வபனம் செய்துக் கொள்ளக்கூடாது. இது பித்ரு தீக்ஷை. ஆனால், நடுவில் பத்னி பிரஸவித்தால் வபனம் உண்டு.

| வபன விஷயத்தில் திதிகள் | | |
|---|---|---|
| 1 | பிரதமை. | தனம்,தானியம் நாசம். |
| 2 | துவிதியை. | வபனம் பண்ணிக்கொள்ளலாம். |
| 3 | திருதியை. | வபனம் பண்ணிக்கொள்ளலாம். |
| 4 | சதுர்த்தி | மாதாவுக்கு ஆகாது. |
| 5 | பஞ்சமி. | வபனம் பண்ணிக்கொள்ளலாம். |
| 6 | சஷ்டி. | சகோதரர்க்கு ஆகாது. |
| 7 | சப்தமி. | வபனம் பண்ணிக்கொள்ளலாம். |
| 8 | அஷ்டமி | குடும்பத்திற்கு ஆகாது. |
| 9 | நவமி. | தானியம் நாசம். |
| 10 | தசமி | வபனம் பண்ணிக்கொள்ளலாம் |

| | | |
|---|---|---|
| 11 | ஏகாதசி | அப்பாவிற்கு ஆகாது. |
| 12 | துவாதசி. | அப்பாவிற்கு ஆகாது. |
| 13 | திரயோதசி. | வபனம் பண்ணிக் கொள்ளலாம். |
| 14 | சதுர்த்தி. | சகோதரிக்கு ஆகாது. |
| 15 | அமாவாசை மற்றும் பௌர்ணமி | அப்பா, அம்மாவிற்கு ஆகாது. |
| | **வபன விஷயத்தில் கிழமைகள்** | |
| 1 | ஞாயிறு. | சிறந்தது. |
| 2 | திங்கள். | சிறந்தது. |
| 3 | செவ்வாய். | கூடாது. |
| 4 | புதன். | சிறந்தது. |
| 5 | வியாழன். | சிறந்தது. |
| 6 | வெள்ளி. | கூடாது. |
| 7 | சனி. | கூடாது. |
| | **வபன விஷயத்தில் மாதங்கள்** | |
| 1 | சித்திரை. | மாதம் முழுவதும் பண்ணிக் கொள்ளலாம். |
| 2 | வைகாசி | மாதம் முழுவதும் பண்ணிக் கொள்ளலாம். |
| 3 | ஆனி | பின்15 நாட்கள் பண்ணிக் கொள்ளக் கூடாது. |
| 4 | ஆடி. | பின்15 நாட்கள் பண்ணிக் கொள்ளக் கூடாது. |
| 5 | ஆவணி | மாதம் முழுவதும் பண்ணிக் கொள்ளலாம். |
| 6 | புரட்டாசி. | மாதம் முழுவதும் கூடாது. |
| 7 | ஐப்பசி. | மாதம் முழுவதும் பண்ணிக் கொள்ளலாம். |
| 8 | கார்த்திகை | மாதம் முழுவதும் பண்ணிக் கொள்ளலாம். |
| 9 | மார்கழி. | முதல் 15 நாட்கள் பண்ணிக் கொள்ளக் கூடாது. |
| 10 | தை. | மாதம் முழுவதும் பண்ணிக் கொள்ளலாம். |
| 11 | மாசி. | முதல் 15 நாட்கள் பண்ணிக் கொள்ளக் கூடாது. |
| 12 | பங்குனி. | முதல் 15 நாட்கள் பண்ணிக் கொள்ளக் கூடாது |

| | |
|---|---|
| | **வபன விஷயத்தில் நக்ஷத்திரங்கள்** |
| 1 | ஜன்ம நக்ஷத்திரத்தில் வபனம் செய்துக் கொள்ளக்கூடாது. |
| | **வபன விஷயத்தில் பொதுவான விஷயங்கள்** |
| 1 | காலை 8.00 மணிக்கு மேல்தான் பண்ணிக் கொள்ள வேண்டும். |
| 2 | மனைவி கர்ப்பம் ஆன 3வது மாதம் முதல் பண்ணிக் கொள்ளக்கூடாது. |
| 3 | குழந்தைபிறந்த 10 நாள்தான் பண்ணிக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | **நாழிகைக் கணக்கு** | |
| 1 | 00.12 நிமிடம் வரை | ½ நாழிகை. |
| 2 | 00.24 நிமிடம் வரை | 1 நாழிகை. |
| 3 | 00.60 நிமிடம் வரை. | 2½ நாழிகை. |
| 4 | 12.00 மணி நேரம். | 30 நாழிகை. |
| 5 | 24.00 மணி நேரம். | 60 நாழிகை. |

| | | |
|---|---|---|
| **பகல் காலங்கள்** | | |
| 1 | 06.00 மணி முதல் 08.24. வரை. | ப்ராத காலம். |
| 2 | 08.24 மணி முதல் 10.48. வரை. | ஸங்கவ காலம். |
| 3 | 10.48 மணி முதல் 01.12 வரை. | மாத்யானிக காலம். |
| 4 | 01.12 மணி முதல் 03.36 வரை. | அபராஹ்ண காலம். |
| 5 | 03.36 மணி முதல் 06.00 வரை. | ஸாயங்காலம். |
| **மாத்யானிக காலம் பற்றிய ஒரு முக்கியக் குறிப்பு** | | |
| 1 | 10.48 மணி முதல் 11.36 வரை | கந்தவர்வ காலம். |
| 2 | 11.36 மணி முதல் 12.24 வரை | குதப காலம். (சிரார்த்த, தர்ப்பணங்களுக்கு ஏற்ற காலம்). |
| 3 | 12.24 மணி முதல் 01.12 வரை | ரௌஹிண காலம். |

## எட்டுக் காலங்கள்

| | | |
|---|---|---|
| 1 | அதிகாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை. | தேவர்கள் காலம். |
| 2 | முற்பகல் 9.00 மணி முதல் நண்பகல் 12.00 ம்ணி வரை. | ரிஷிகளின் காலம். |
| 3 | நண்பகல் 12.00 ம்ணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை. | பிதுர்க்களின் காலம். |
| 4 | பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை. | சந்தியாகாலம். |
| 5 | முன் இரவு 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை. | பூத காலம். |
| 6 | இரவு 9.00 மணி முதல் பின் இரவு 12.00 மணி வரை. | பிரேத காலம். |
| 7 | பின் இரவு 12.00 மணி முதல் விடியற்காலம் 3.00 மணி வரை. | ராக்ஷஸ காலம். |
| 8 | விடியற்காலம் 3.00 மணி முதல் 6.00 வரை. | பிரம்ம முஹீர்த்தம் |

## கர்தாவின் கிரமம். (ஆண்களுக்கு)

இறந்த நபருக்கு கர்மா செய்கின்ற அதிகாரம் அதன் வரிசையில் தரப்பட்டுள்ளது. முதலில் சொல்லியவர் இல்லையென்றால் அதன் கீழே தரப்பட்டவர்களைக் கொண்டு கர்மா நடத்த வேண்டும்.

1) தன் வயிற்றில் பிறந்த புத்திரன்.
2) புத்திரனுடைய புத்திரன்.
3) புத்திரனுடைய புத்திரனுடைய புத்திரன்.
4) தான் தத்தெடுத்துக் கொண்ட புத்திரன்.
5) அவனுடைய புத்திரன்.
6) பிறனுக்குத் தத்து கொடுத்த புத்திரன்.
7) தன் சொத்துக்குரிய பெண் வயிற்றுப் பேரன்.
8) பொதுவாகப் பெண் வயிற்றுப் பேரன்.
9) பாகம் பிரியாத ஸபத்னீ புத்திரன்.
10) பதி.
11) பாகம் பிரிந்த ஸபத்னீ புத்திரன்.
12) புத்திரி.
13) தம்பி.

14) சகோதர புத்திரர்கள் உள்ளவர்களில் பெரியவன்.
15) மாற்றாந்தாய் வயிற்று சகோதரன்.
16) அவன் புத்திரன்.
17) தந்தை.
18) தமையன்.
19) தாய்.
20) நாட்டுப் பெண்.
21) பிள்ளையின் பெண்.
22) பெண்ணின் புத்திரி.
23) பிள்ளை வய்ற்றுப் பேரனுடைய பத்னி.
24) அவன் புத்ரி.
25) தத்துப் புத்திரர்களின் பத்னிகள்.
26) சகோதரி.
27) சகோதரி புத்திரன்.
28) ஸபிண்டன்.
29) ஸமானோதகன்.
30) மாத்ருஸ பிண்டன்.
31) மாத்ருஸமானோதகன்.
32) சிஷ்யன்.
33) மாப்பிள்ளை.
34) சினேகிதன்.

## கர்தாவின் கிரமம். (பெண்களுக்கு)

1) தன் வயிற்றில் பிறந்த புத்திரன்.
2) புத்திரனுடைய புத்திரன்.
3) புத்திரனுடைய புத்திரனுடைய புத்திரன்.
4) தான் தத்தெடுத்துக் கொண்ட புத்திரன்.
5) அவனுடைய புத்திரன்.
6) பிறனுக்குத் த்த்து கொடுத்த்ட புத்திரன்.
7) தன் சொத்துக்குரிய பெண் வயிற்றுப் பேரன்.
8) பொதுவாகப் பெண் வயிற்றுப் பேரன்.
9) பாகம் பிரியாத ஸபத்னீ புத்திரன்.
10) பர்தா.
11) பாகம் பிரிந்த ஸபத்னீ புத்திரன்.
12) புத்திரி.
13) பர்த்தாவின் தம்பி.
14) பர்த்தாவின் சகோதர்களின் புத்திரர்களுள் மூத்தவன்.
15) பர்த்தாவின் மாற்றாந்தாய் வயிற்றுச் சகோதரன்.
16) அவன் புத்திரன்.
17) பர்த்தாவின் தந்தை.
18) பர்த்தாவின் தமையன்.
19) பர்த்தாவின் தாய்.
20) நாட்டு பெண்.
21) பிள்ளையின் பெண்.
22) பெண்ணின் புத்திரி.
23) பிள்ளை வயிற்றுப் பேரனுடைய பத்தினி.

24) அவன் புத்ரி.
25) தத்துப் புத்திரரகளின் பத்னிகள்.
26) ஸகோதரி.
27) பர்த்தாவின் சகோதரி பிள்ளை.
28) இறந்தவளின் ஸகோதரி பிள்ளை.
29) இறந்தவளின் சகோதரனுடைய பிள்ளை.

## சில சொற்களின் பொருள்

1) அத்தான் : அத்தையின் பிள்ளை.
2) அத்தங்காள் : அத்தையின் பெண்.
3) அதிக்ராந்த ஆசௌசம் : காலங்கடந்து கேட்ட தீட்டு..
4) அநுபந்தன் : உபநயனம் ஆகாதவன்.
5) அமத்தரகம் : மந்திரமில்லாமல்.
6) அம்மங்காள் : மாமாவின் பெண்.
7) அம்மான்சேய் : மாமாவின் பிள்ளை.
8) அனுகமனம் : கூடப்போவது.
9) அஸ்தி : எலும்பு.
10) ஆசௌசம் : தீட்டு.
11) ஆஹிதாக்னி : யாகம் செய்தவர்.
12) ஆசௌசி : தீட்டு உடைய நபர்.
13) உபனீதன் : உபனயனம் ஆனவன்.
14) உதகதானம் : தர்ப்பணம்.
15) கர்த்தா :கர்மாவைச் செய்ய அதிகாரம் உள்ளவன்.
16) கர்ப்பஸ்ராவம் : கருச்சிதைவு.
17) கனனம் : புதைத்தல்.
18) கனிஷ்டன் : இளையவன்.
19) கன்யா, கன்யகை : விவாஹமாகாத பெண்.
20) கூடஸ்தன் :வம்ச வழியில் முதல் நபர்.
21) க்ருஹம் : வீடு.
22) ஸ்ரோத்ரியன் : ஒரு சாகையைப் பூர்ணமாக அத்யயனம் செய்தவன்.
23) ஸ்வசுரன் : மாமானார்.
24) ஸ்வஸ்ரூ : மாமியார்.
25) ஜனனம் : பிறப்பு.
26) ஜனக பிதா : தன்னைப் பெற்ற பிதா.
27) ஜனக மாதா : தன்னைப் பெற்ற மாதா.
28) ஜாதாசௌசம் : பிறப்புத் தீட்டு.
29) ஜாமம் : மூன்று மணி நேரம்.
30) ஜாமாதா : மாபிள்ளை.
31) ஜீவபித்ருக்கள் : தகப்பன் உயிரோடு இருக்கும் நபர்.
32) ஜ்யேஷ்டன் : மூத்தவன்.
33) ஜ்யேஷ்ட ப்ராதா : அண்ணன், தமையன்.
34) ஜ்யேஷ்டப்ராத்ரு பத்னி: மன்னி, மதனி.
35) ஜ்ஞாதி : பங்காளி.
36) த்ரிராத்ர ஞாதிகள் : மூன்று நாட்கள் பங்காளிகள்.
37) தசராத்ர ஞாதிலள் : பத்து நாட்கள் பங்காளிகள்.

| | |
|---|---|
| 38) தர்ப்பணம் | : எள் நீர் கடன். |
| 39) தர்பணம் | : க்ண்ணாடி. |
| 40) தர்சம் | : அமாவாசை. |
| 41) தன ஹாரி | : சொத்தை அடைந்தவன். |
| 42) தஹனம் | : எரித்தல். |
| 43) திலம் | : எள். |
| 44) துஹிதா | : பெண். |
| 45) தௌஹித்ரன் | : பெண் வயிற்றுப் பேரன். |
| 46) தௌஹித்ரி | : பெண் வயிற்றுப் பேத்தி. |
| 47) த்ரிராத்ரம் | : மூன்று இரவு. |
| 48) நிமிந்த்ரணம் | : சிரார்த்தத்தில் ஸ்வாமியாக அன்வயிப்பது. |
| 49) பத்னி | : மனைவி. |
| 50) பஹிஷ்டை | : மாதவிடாய். |
| 51) பர்த்தா | : கணவன். |
| 52) பாகினேயன் | : மருமான். |
| 53) பார்வணம் | ; மூன்று பேர்களை உத்தேசித்த சிரார்த்தம். |
| 54) பித்ருவ்யன் | : பெரியபா, சிற்றப்பா. (தகப்பன் வழி). |
| 55) பிதாமஹன் | : பாட்டன் (தகப்பனின் தகப்பன்). |
| 56) பிதாமஹி | : பாட்டி (தகப்பனின் தாய்). |
| 57) பௌத்ரன் | : பிள்ளை வயிற்று பேரன். |
| 58) பௌத்ரி | : பிள்ளை வயிற்றுப் பேத்தி. |
| 59) ப்ரபௌத்ரன் | : கொள்ளுப் பேரன். |
| 60) ப்ரஜை | : குழந்தை. |
| 61) ப்ராதரு புத்ரன் | : ஸகோதரன் பிள்ளை. |
| 62) ப்ராத்ரு புத்ரி | : ஸகோதரன் பெண். |
| 63) ப்ரதாப்தீகம் | : முதல் வருஷ ஸ்ரார்த்தம் (ஆப்தீகம்) |
| 64) ப்ரத்யாப்தீகம் | : வருஷந்தோறும் அனுஷ்டிக்கும் ஸ்ரார்த்தம். |
| 65) ப்ர்பிதாமஹன் | ; கொள்ளுப்பாட்டன் (தந்தை வழி). |
| 66) ப்ரபிதாமஹி | : கொள்ளுப்பாட்டி (தந்தை வழி). |
| 67) பிந்நோதரப்ராதா | : மாற்றாந்தாய் பிள்ளை. |
| 68) பித்ருவ்யபத்னி | : பெரியப்பா, சித்தப்பா மனைவி (தகப்பன் வழி. |
| 69) மாதாமஹன் | : தாய்வழிப் பாட்டன். |
| 70) மாதாமஹி | : தாய்வழிப் படிடி. |
| 71) மாதுலானி | : மாமி; அம்மான் மனவி. |
| 72) மாத்ருபகினீ | : தாயின் ஸகோதரி. |
| 73) மாத்ருஷ்வஸா | : தாயின் ஸஹோதரி. |
| 74) ரஜஸ்வலை | : பஹிஷ்டையான பெண். |
| 75) வபனம் | : க்ஷௌவரம். |
| 76) விச்சித்தி | : கருச்சிதவு. |
| 77) விதுரன் | : மனைவியை இழந்த கணவன். |
| 78) வஹனம் | : சுமத்தல். |
| 79) ஸஹோதரன் | : உடன் பிறந்தவன். |
| 80) ஸஹோதரி | : உடன் பிறந்தவள். |
| 81) ஸங்க்ரமணம் | : மாதப் பிறப்பு. |
| 82) ஸத்ய: சௌசம் | : ஸ்நானம் மட்டில். |

| | |
|---|---|
| 83) ஸபத்னி மாதா | : மாற்றாந் தாய். |
| 84) ஸம்பர்க்கம் | : சேர்க்கை. |
| 85) ஸம்வத்ஸரம் | : வருஷம். |
| 86) ஸமானோதகர் | : மூன்று நாள் பங்காளிகள். |
| 87) ஸன்னி பாதம் | : சேர்க்கை. |
| 88) ஸாபிண்ட்யர் | : பத்து நாட்கள் பங்காளிகள். |
| 89) ஸிலிவாலி | : சதுர்தியோடு கூடிய அமாவாசை. |
| 90) ஸ்நுஷா | : நாட்டுப் பெண். |
| 91) ஸ்வல்பம் | : குறைவு. |
| 92) ஸ்வீகார பிதா | : தத்து எடுத்துக் கொண்ட தகப்பன். |
| 93) ஸ்வீகார மாதா | : தத்து எடுத்துக் கொண்ட தய். |
| 94) ஸ்வீகாரம் | : தத்து கொடுத்தல். |
| 95) ஸலேச ஸ்னானம் | : உடுத்த துணியோடு ஸ்னானம் செய்தல். |

## பங்காளிகள் விஷயத்தில் தலைமுறைக் கணக்கு

1)தான், 2) தன் பிதா, 3) தன் பிதாமஹன், 4) தன் ப்ரபிதாமஹன், 5) ப்ரபிதாமஹனின் பிதா, 6) ப்ரபிதாமஹனின் பிதா மகன், 7) ப்ரபிதமஹனின் ப்ரபிதாமஹன், ஆக ஏழு தலை முறை.

தன் வம்ச வழியில் மேற்குறிப்பிட்ட இந்த ஏழாதவது நபர் கூடஸ்தர் அல்லது மூலபுஷர் எனப்படுவர்.

கூடஸ்தரின் ஆண் ஸந்ததிகள், அவர்களுகு பிறந்த ஆண் ஸந்ததிகள், தன்வரை உள்ள ஏழு தலை மூறை ஆண்களும் (அவர் மனைவியரும்) பத்து நாள் பங்காளிகள் (ஸாபிண்டயர்), (தன் மகனுக்கு மேற்படி மூலபுருஷன்(1) ஐ விட்டு, மேற்குறிப்பிட்ட நபர் (2) கூடஸ்தராகக் கொள்ள வேண்டும்).

பத்து நாட்கள் பங்காளிகளில் பரஸ்பரம் பத்து நாட்கள் தீட்டு உண்டு.

தனக்குக் கீழ் ஸந்ததி (ஏழு தலைமுறை) ஸமானோதர் எனப்படுவர். இவர்கள் மூன்று நாட்கள் தீட்டுக்காரர்கள்.

இதே வம்ச பரம்பரையில் உள்ள மற்றவர்கள் கோத்ர தாயாதர்கள் என்பதால் தீட்டுக்காரர்கள் அல்லர். (பெண்களுக்கு தகப்பனார், அவர் தந்தை, தகப்பனின் பாட்டன் ஆகியவர்கள் ஸபிண்டர்கள் எனப்படுவர்.

ஒவ்வொருவரும் தன் வம்ச வழியில் மேல், கீழ் தலைமுறையில் உள்ள அல்லது இருந்த நபர்களை (அவர் மனைவி, ஆண் ஸந்ததி உட்பட) அறிவது அவசியம். அப்பொழுதுதான் பங்காளிகளால் ஏற்படும் தீட்டை நிர்யணிக்க முடிய்ம். தலைமுறை கூடஸ்தனிலிருந்து எண்ணப்பட வேண்டும்.

# சில பொது விஷயங்கள்.

1) ஆசௌச காலத்திலும் கிரஹண தர்ப்பணம் உண்டு.
2) ஆசௌச காலத்தில் அமாவாசை, மாதப்பிறப்பு, தர்ப்பணங்கள், சிரார்த்தம் ஆகியவைகளை செய்யக்கூடாது.
3) ஆசௌச காலத்தில் வீட்டில் தேவாத ஆராதனம் (நித்யபூஜை) செய்யக்கூடாது.
4) ஆசௌச காலத்தில் கோவிலுக்குப் போகக்கூடாது.
5) ஆசௌசம் உள்ளவர்கள், ஆசௌச காலத்தில் வேறு நபர்கள் மூலமாக, தன் பெயரிலோ அல்லது குடும்பத்தில் உள்ளவரகள் பெயரிலோ கோவிலில் அர்ச்சனை செய்யக்கூடாது.
6) ஆசௌச காலத்தில் ஸந்தியாவந்தனம் உண்டு. ஆனால், தினமும் செய்வதற்கும் ஆசௌச காலத்திலும் செய்வதற்கு சில வேறுபாடுகள் உள்ளது. "ஆசௌச காலத்தில் ஸந்தியாவந்தனம்", என்ற தலைப்பில் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.
7) பர்த்தாவுக்கு (கணவருக்கு) உள்ள தீட்டுகள் எல்லாம் பத்னிக்கு (மனைவிக்கு) உண்டு.
8) பத்னிக்கு என்று உள்ள தீட்டுகள் பர்த்தாவுக்கு கிடையாது.
9) தீட்டுள்ளவன் தீட்டு இல்லாதவனைத் தொட்டால், தீட்டு இல்லாதவன் குறைந்த பட்சம் ஸ்னானம் செய்ய வேண்டும்.
10) பிரம்மசாரி, தீட்டு உள்ளவர்களின் அன்னத்தைச் சப்பிட்டால் பத்து நாட்கள் அசுத்தி உண்டு.
11) ரஜஸ்வலைகளுக்கு (பஹிஷ்டை) மூன்று நாடகள் தீட்டு உண்டு.
12) பன்னிரெண்டு நாட்களுக்கு முன் ரஜோதர்சனம் (பஹிஷ்டைத் தெரிந்தால்) சௌசமாத்ரம் உண்டு. ( அதாவது சுத்தி செய்துக் கொள்வது).
13) 13 நாட்களுக்கு மேல் 17 நாள்களுக்குள் ஆனால், ஸ்நானம் செய்ய வேண்டும்.
14) 18 நாட்களுக்கு மேல் ஆனால், 3 நாட்கள் தீட்டு உண்டு.
**15)** ராத்திரியில் ஜனன, மரண, ரஜோதர்சனங்கள் நேர்ந்தால், அ) இரவு 1 ½ மணிக்கு முன் என்றால் முதல் நாள் கணக்கு. ஆ) இரவு 1 ½ மணிக்கு மேல் என்றால் மறுநாள் கணக்கு. **(குறிப்பு:- ஸூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு 7 ½ மணி காலம் வரை முதல் நாள் என்றும், பிறகானால் மறுநாள் என்றும் கணக்கிட வேண்டும். ஆகவே, ஸூர்ய அஸ்தமனத்திற்குத் தகுந்தாற் போல், மேலே குறிபிட்டுள்ள இரவு 1 ½ மணி என்பது சிறிது மாறுபடும். இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்)**
16) பிறந்த குழந்தை 10 நாட்களுக்குள் மரித்தால் கனனம் (புதைப்பது) ஸம்ஸ்காரம்.
17) பிறந்த குழந்தை 11 நாட்களுக்கு மேல் 2 வயதுக்குள் மரித்தால் கனனம் அல்லது தகனம். அதற்கு மேற்ப்பட்டால் தகனம்.
18) பிறப்புத் தீட்டை 10-நாட்கள் கழித்துக் கேட்டால் தீட்டுக் கிடையாது.
19) இரவில் தர்ப்பணம் செய்யக்கூடாது.
20) வேண்டுமென்றே செய்து கொண்ட தற்கொலையானால் அமந்தரகமாக (மந்திரமில்லாமல்) தஹனம். தகனம் வரைதான் தீட்டு. ஒரு வருஷம் கழித்து ப்ராயச்சித்தம் செய்து கர்மாவை அனுஷ்டிக்க வேண்டும். அப்பொழுதான் ஜ்ஞாதிகளுக்கு 3 நாட்கள் தீட்டு.
21) தன்னையறியாமல் நேர்ந்த துர்மரணத்தில் அப்பொழுதே பிராயச்சித்தம் செய்து, கர்மாவும் செய்து, தீட்டும் அனுஷ்டிக்க வேண்டும்.
22) ஸந்யாசி சவத்திற்கு தோஷமில்லை.
23) ஸந்யாசி மரணத்தில் தீட்டு இல்லை.
24) மாதா, பிதாக்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு வெள்ளிக்கிழமையில் ஸஞ்சயனம் செய்யக்கூடாது. ஆனால், மாதப் பிறப்பு, அமாவாசைக் குறிக்கிட்டால் செய்யலாம்.

25) கர்மா மத்தியில் வஸ்த்ரம், பிண்டம், பாத்திரம், செம்பு, பாஸாணம் (கல்) காணாமல் போனால், புதியதாக ஸ்தாபித்து, கடந்த பிண்டோதகங்களை மறுபடி செய்ய வேண்டும்.
26) மாதா, பிதாக்கள் விஷயத்தில் 12 முதல் 17 ம் நாள் வரை ஸபிண்டீகரணம் செய்ய நாள் பார்க்கத் தேவையிலை.
27) பன்னிரெண்டு வயது முடியாத ப்ரஹ்மசாரிக்கு ஸபிண்டிகரணம் செய்யத்தேவையில்லை. ஆனால், நாராயண பலி உண்டு.
28) உபநயனம் ஆகாதவன் 12 வயதிற்கு மேல் இறந்தால் மந்திரமில்லாமல் ஸபிண்டீகரணம் வரை செய்ய வேண்டும்.
29) மாதத்திற்கு ஒருமுறை செய்யும் ஸோதகும்பம் நின்று போனால் நின்று போனதுதான். அதற்கு வேறு காலம் இல்லை.
**30)** ஊன மாஸிகங்களை அந்தந்தக் காலத்தில் செய்ய முடியாமல் போனால் மீண்டும் செய்ய முடியாது. **(குறிப்பு: ஊன மாஸிகத்தைப் பற்றிய விபரம் பின்னால் சேர்க்கப்பட்டுள்ளது.)**
31) ஒரு மாதத்தில் இரண்டு திதிகள் வந்தால் பின் திதியில் ஸ்ரார்த்தம் செய்ய வேண்டும். பின் திதியில் ஸங்கரமண ( மாதப் பிறப்பு) தோஷம் இருந்தால், முன் திதியில் செய்ய வேண்டும்.
32) ஒருவரது ஸ்ரார்த்ததில் அவரது ஜ்ஞாதிகள் நிமிந்த்ரணம் (பிராமணார்த்தம்) இருக்கக்கூடாது. அதே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் கூடாது.
33) பிதா, புத்ரன், ஒரே வயிற்றில் பிறந்த ப்ராத்ஹக்கள் (ஸகோதரர்கள்) நிமிந்த்ரணம் இருக்கக்கூடாது.
34) பத்னி பஹிஷ்டையானால் பர்த்தா நிமிந்த்ரணம் இருக்கக்கூடாது.
35) ஹோமத்துடன் செய்யும் ஸ்ரார்த்தங்களுக்கு தர்ப்பணம் உண்டு.
**36)** தகப்பானார் ஜீவித்திருக்கும் போது, ஒருவன் செய்யும் எந்த ஸ்ரார்த்ததிலும் மறுநாள் பரேஹிணி தர்ப்பணம் இல்லை. **(குறிப்பு: இதன் விபரம் பின்னால் சேர்க்கப்பட்டுள்ளது)**
37) அமாவாசையும், மாதப்பிறப்பும் ஒன்று சேர்ந்தால், மாதப்பிறப்பு தர்ப்பணம் மட்டும் செய்தால் போதும். அமாவாசை தர்ப்பணம் செய்ய வேண்டாம். முதலாவதில் இரண்டாவதும் சேர்ந்துவிடும்.
38) அமாவாசையும், ப்ரத்யாப்திகமும் ஒன்று சேர்ந்தால், ப்ரத்யாதிகத்துக்குப் பிறகு அமாவாசைத் தர்ப்பணம் செய்ய வேண்டும்.
39) மாதப்பிறப்பும், ப்ரத்யாப்திகம் ஒன்று சேர்ந்தால் முதலில் ஸங்க்ரமண தர்ப்பணத்தைச் செய்துவிட்டு, பிறகு ப்ரத்யாப்திக ஸ்ரார்த்ததைப் பண்ண வேண்டும்.
40) பிதாவின் ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு அமாவாசை முதலிய தர்ப்பணங்கள் செய்ய வேண்டும்.
41) கிரஹண தர்ப்பணம் மிக முக்கியமானது. இதைவிடக்கூடாது.
42) ஸூர்ய கிரஹணத்தில் முன் பாதியிலும் (பிடித்தவுடன்), சந்திர கிரஹணத்தில் பின் பாதியிலும் (விட ஆரம்பித்த பிறகும்) தர்ப்பணம் செய்ய வேண்டும்).
43) ஸூர்ய உதயத்திலிருந்து கிழமை பிறக்கிறது.
44) தீட்டு உள்ளவர்கள் மற்றவர்களுக்கு நமஸ்காரம் செய்யக்கூடாது.
45) தீட்டு உள்ளவர்களுக்கு மற்றவர்கள் நமஸ்காரம் செய்யக்கூடாது.
46) தீட்டுக்காரர் வீட்டில் சாப்பிட்டாலும், வசித்தாலும் 10 நாட்களுக்கு தீட்டு உண்டு.
47) சிரார்த்த தினத்தில் துக்கம் கேட்கக்கூடாது.
48) தீட்டுத் தர்ப்பணத்தை வீட்டில் செய்யக்கூடாது. ஜலக்கரையில் செய்ய வேண்டும்.
49) ப்ரம்ஹமசாரிகள் க்ருதயம் செய்தால் மட்டும் உதகதானம், இல்லாவிடில் இல்லை.
50) ப்ரஹ்மசாரிகள் தன் தாய், தகப்பன் தவிர மற்றவர் சவங்களைத் சுமக்கக்கூடாது.

51) அதிக்ராந்த ஆசௌசத்தில் (காலங்கடந்து கேட்டத் தீட்டு) வாஸோதகம் ( துணியால் ஜலம் விடுவது) இல்லை.
52) ஜனன, மரணத் தீட்டிலும் ஏகாதசி, துவாதசி விரதங்களை விடக்கூடாது.
53) கர்தா, ஸபிண்டீகரணத்துக்கு முன் சுபகாரியம் செய்யக்கூடாது.
54) தீட்டினால் நின்று போன மாஸிகத்தை தீட்டுப்போகும் தினத்தில் நடத்த வேண்டும்.
55) ஸ்த்ரீகள் செய்யும் சிரார்த்தங்கள் எதற்கும் ஹோமம் கிடையாது.
56) மாமனார், மாமியார், பர்த்தா, தாய், தகப்பன் இவர்களுடைய சிரார்த்தத்தை ஸ்திரீகள் செய்யும்படி நேர்ந்தால், அந்த சிரார்த்தங்கள் த்ரிபுருஷோத்தேஸ்யகமாக, பார்வணமாக செய்ய வேண்டும் என்று மட்டும் ஸ்மிருதிகளில் கூறப்பட்டுள்ளது.
57) ஆனால், சிஷ்ட்டாரத்தில் பல பெரியோர்கள் மேற்படியார் சிரார்த்தத்தில் ஹோமம் செய்தே வருகின்றனர்.
58) சிரார்த்தம் பஹிஷ்டையினால் அல்லது மறதியானால் விட்டுப்போனால் க்ருஷ்ணப்பக்ஷ ஏகாதசியிலாவது அல்லது அமாவாசையிலாவது செய்ய வேண்டும்.

## ஆசௌச/ஆபத்காலத்தில் ஸந்தியவந்தனம் செய்யும் முறை

1) ஆசமனம், 2) கணபதி தியானம், 3) பிராணாயாமம், 4) ஸங்கல்பம், 5) மார்ஜனம்,6) ப்ராசனம், 7) மறுபடியும் மார்ஜனம், 8) அர்க்யப் பிரதானம், 9) ப்ராயச்சித்த அர்கயம், 10) காயத்ரீ ஜபம், 11) ஸமர்ப்பணம், 12) ஆசமனம்.
2) வேதம் நமக்கு கர்மாக்களை விதித்துள்ளது. அதில் ஸந்தியாவந்தனம் பிரதனமாகக் காட்டப்பட்டுள்ளது. ஸந்தியாவந்தனம் செய்யாமல் எந்த காரியமும் செய்ய முடியாது. ஸந்தியாவந்தனத்தை மூன்று வேளையையும் எப்பொழுதும் செய்ய வேண்டும் என்பது கட்டாயம்.
3) சுத்தமாக இருந்து கொண்டு நித்யம் ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும். அப்படி செய்யாவிட்டால், அவனுக்கு எந்த கர்மாவும் செய்ய முடியாத நிலை ஏற்படும். அப்படியே செய்தாலும், அந்தக் கர்மா பலனைக் கொடுக்காது.
4) ஆசௌச காலத்தில் எந்தக் கர்மாவையும் பண்ண வேண்டாம்/பண்ணக்கூடாது என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது
5) ஆனால், ஆசௌச காலத்தில் ஸந்தியாவந்தனம், இஷ்டி, ஸமிதாதானம், ஔபாஸனம் போன்ற நித்ய கர்மாக்களைச் செய்ய வேண்டும்.
6) **இதற்கான விதிகள்:-** ஆசௌச காலத்தில் நித்யகர்மாகளைக் செய்யும் பொழுது மந்திரங்களை வாய்விட்டுச் சொல்லக்கூடாது. மனதில்தான் சொல்ல வேண்டும். ப்ராணாயம மந்திரத்தை மனதாலும் சொல்லக்கூடாது. ப்ராணாயமத்தை ஒரு கிரியையாக மூச்சை உள்வாங்கி, நிறுத்தி, வெளியே விடவேண்டும். ஆசௌச காலத்தில் காயத்ரீயினால் அர்க்யம் விட்டு, பிரதட்சிணம் செய்து, ஸூர்ய தியானம் செய்ய வேண்டும். காயத்ரீ அர்க்யம் விடும் போது வாய்விட்டு சொல்ல வேண்டும். மிக சப்தமாகச் சொல்லக்கூடாது. சாதாரணமாக நாம் காயத்ரீ சொல்வதற்கும் இதற்கும் மாறுபாடு உள்ளது. “அஸவாதித்யோ” மந்திரத்தைச் சொல்லிவிட்டு காயத்ரீயை பத்து தடவை சொல்ல வேண்டும். ஆசௌச/ஆபத்காலத்தில் காயத்ரீயை மூன்று வேளையும் நின்று கொண்டு சொல்ல வேண்டும்.
7) ஆசௌச காலத்தில் காய்ந்த வஸ்த்திரம் உடுத்திக் கொண்டு ஸந்தியாவந்தனம் செய்யக்கூடாது. ஈர வஸ்த்திரத்தை ஏழு முறை உதறி ஸூரியனிடன் காண்பித்துவிட்டு, அந்த வஸ்த்திரத்தை உடுத்திக்கொண்டு செய்ய வேண்டும்.
8) ஆசௌச காலத்தில் ஸந்தியாவந்தன நேரத்தில் தாற்காலிக சுத்தி ஏற்படுவதால், சுருக்கமாக ஸந்தியாவந்தனத்தை செய்து கொள்ள வேண்டும். செய்யாவிட்டல் ஆசௌசம் அதிகமாகும்.
9) விபூதி போனறவற்றை ஜலத்தில் குழைத்து இட்டுக் கொள்ளக்கூடாது.

10) ஜலத்தையே விபூதியாக இட்டுக் கொள்ளவேண்டும்.

## மாஸிகம்/ஊனமஸிகம்

1) ஒருவர் இறந்த பிறகு, மாதா மாதம், அதே பக்ஷத்தில், அதே திதியில், 12 மாதங்கள் செய்ய வேண்டிய கர்மா இது. இதுவும் ஒருவகை ஸ்ரர்த்தமே. மாதா மாதம் தொடர்ந்து 12 மாதங்கள் செய்ய வேண்டும். இதற்கு மாஸிகம் என்று பெயர். இதைத் தவிர 4 மாஸிகங்கள் அதிகமாக செய்ய வேண்டும். இதற்கு ஊனமாஸிகம் என்று பெயர்.
2) முதல் ஊனமாஸிகம் 27வது நாள் வரும். இதை 27ம் நாளிலிருந்து 30 நாளுக்குள் செய்ய வேண்டும்.
3) இரண்டாவது ஊனமாஸிகத்தை 40 நாட்களுக்கு மேல் 41,43,45 நாட்களில் ஒரு நாள் செய்ய்ய வேண்டும்.
4) மூன்றாம் ஊன மாஸிகம் ஆறாம் மாதம் வரும்.இந்த ஊன மாஸிகத்தை 170 நாட்களுக்கு மேல் 180 நாட்களுக்குள் செய்ய வேண்டும்.
5) நான்காவது ஊன மாஸிகம் (ஆப்தீக ஊன மஸிகம்) 340க்கு மேல் 355 நாட்களுக்குள் செய்ய வேண்டும்.
6) த்ரைபக்ஷிகம் என்பது 45 நாள் ஊனம். ஏகாதசி, விரத தினங்கள், வெள்ளிக்கிழமைகளில் செய்யக்கூடாது.
7) மற்ற ஊனமாஸிகங்களையும் வெள்ளிக்கிழமை, பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி, சதுர்தசீ, சதுர்த்தசியோடு கூடிய அமாவாசை ஆகிய திதிகளிலும், கிருத்திகை, ஆயில்யம், பூரம், கேட்டை, மூலம், பூராடம், பூரட்டாதியிலும் செய்யக்கூடாது.
8) த்விதியை, ஸப்தமி, த்வாதசி ஆகிய திதிகள், ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய வாரங்கள், கிருத்திகை, புனர்வசு, உத்திரம், விசாகம், உத்திராடம், பூரட்டதி ஆகிய நக்ஷத்திரங்கள் இவற்றில் இரண்டு சேர்ந்தால் த்விபுஷ்கரம்: மூன்று சேர்ந்தால் திரிபுஷ்கரம். இந்த நாட்களிலும் ஊனமாஸிகம் செய்யக்கூடாது.
9) தோஷமற்ற காலம் கிடைக்காவிட்டால் விதிக்கப்பட்ட காலத்தின் கடைசி தினத்தில் செய்ய வேண்டியது. ஊன மாஸிகங்களை மாஸிகத்திற்கு முன் அல்லது பின்னாகச் செய்யலாம்.

## பரேஹிணி தர்ப்பணம்

சிராத்ததின் மறுநாள் விடியற்காலம் எழுந்து பல் தேய்க்காமல் ஸ்நானம் செய்து தலையை மட்டில் துவட்டிக் கொண்டு ஈர வஸ்தரத்துடன் செய்ய வேண்டும்.

## மஹாளயபக்ஷம்

**மஹாளயம்:** சூரியன் கன்யா ராசியில் சஞ்சரிக்கும் புண்ணியமிகு புரட்டாசி மாதத்தில் கிருஷ்ணபட்சப் பிரதமை முதல் அமாவாசை/பிரதமை வரை உள்ள காலத்துக்கு பித்ரு பட்சம், மஹாளயம் என்று பெயர்.

**மஹாளய பக்ஷம்**:- மஹாளய பக்ஷம் என்பது, மஹாளய பக்ஷ புண்ய காலத்தில் பித்ருக்களை உத்தேசித்து செய்யப்படும். கர்மா. இதை பார்வண விதமாகவும் செய்யலாம். வர்ணம்; விஸ்வே தேவர்; பித்ரு வர்க்கம்; மாத்ரு வர்க்கம்; ஸபத்நீக மாதா வர்க்கம்; காருண்ய பித்ருக்கள் வர்க்கம் என்று 5 பேரை வரிக்க வேண்டும். தாயார் உள்ளவர்கள் மாத்ரு வர்க்கத்தை நீக்கி 4 பேரை வரிக்க வேண்டும்.

**தேவையானவை:** ஆஸனம், தாம்பாளம், தீர்த்தத்துடன் ஒரு கலசம், பஞ்சபாத்ரம், மூன்று தர்ப்பங்களாலான ஒரு பவித்ரம், கொஞ்சம் கட்டைத் தர்ப்பங்கள், 7 அல்லது 9 அல்லது 11 தர்ப்பங்களாலான 1 அல்லது 2 கூர்ச்சம், வெற்றிலை, பாக்கு மற்றும் தக்ஷிணை. (32 தர்ப்பங்களால் ஆன கூர்ச்சம் விஷேசம்)

**செய்ய வேண்டிய காலம்:- (**மாத்யானிக காலத்தில் சுமார் 11.36 மணிக்கு மேல் 12.24 மணிக்குள் உள்ள குதப காலத்தில் செய்ய வேண்டும். மதியம் 01.12 மணி முதல் 03.36 மணி வரை உள்ள அபராஹ்ண காலம் மிக உயர்ந்தது).

**வழிபாடு:** முன்னோர்கள் வழிபாட்டுக்கு உரிய காலம் " ஆத்மா வை புத்ர நாம ஆஸித்**",** என்கிறது வேதம். இந்த வாக்கியம், நமக்கும் நம் முன்னோர்களுக்குமான தொடர்பை தெளிவுற விளக்குகிறது. நம் முன்னோர்கள் இந்த உலகை விட்டுச் சென்றாலும், அடுத்து வேறு பிறவி எடுத்தாலும், நம்மிலும், நம் சந்ததியிலும் அவர்களுடைய தொடர்பு இருப்பதால் நம் முன்னோர்களுக்கான நன்றியை, மரியாதையை, வணக்கத்தை, கடமையை சிரார்த்தம், தர்ப்பணம் முதலான கர்மாக்களைச் செய்கிறோம். அப்போது பித்ருக்களின் பசிக்கும் தாகத்துக்குமாக எள்ளும் தண்ணீரும் அர்ப்பணிக்கிறோம்.

**உகந்த காலம்:** மறைந்த முன்னோர்கள் மஹாளய பக்ஷம் 15 நாட்களும் பூமிக்கு வந்து தங்குவதாகவதாக ஐதீகம். (ஒரு பக்ஷத்திற்கு 15 நாட்கள் என்றாலும் அமாவாசைக்கு அடுத்த பிரதமையும் மஹாளயபக்ஷத்தைச் சேர்ந்த்தது. ஆகவே 16 நாட்கள்.) ஆகவே ஒவ்வொருவரும் அவரவர் குடும்ப முன்னோர்களுக்கு ஸ்ரார்த்தம் அல்லது தர்ப்பணம் செய்து அவர்களை ஸந்தோஷப்படுத்த வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. மஹாளய பக்ஷம் முழுவதும் தினசரி ஸ்ரார்த்தம்/ தர்ப்பணம், செய்பவர்கள் செய்யலாம். அவ்வாறு செய்வது விஷேசம்.

**மஹாளயத்தை விரிவாகச் செய்தல்:** மஹாளயபக்ஷம் 16 நாட்களிலும், ஒவ்வொரு நாளும் 5 அல்லது 6 பிராமணர்களை வீட்டிற்கு வரவழைத்து, அவர்களுக்கு சாப்பாடு போட்டு, ஹோமம், பிண்டபிராதானம் செய்து, ஸ்ரார்த்தம் செய்து, ஸ்ரார்த்தாங்க தர்ப்பணம் செய்து விரிவாகச் செய்யலாம். (அதாவது வருஷா வருஷம் பெற்றோர்க்குச் செய்யும் பார்வண ஸ்ரார்த்தம் போல் செய்வது.)

**ஒரு நாள் மட்டும் செய்பவர்கள்:** அப்படி முடியாதவர்கள், ஏதாவது ஒரு நாள் மட்டும் ஹிரண்ய ஸ்ரார்த்தமோ அல்லது தர்ப்பணமோ செய்யலாம். இப்படி செய்ய நினைப்பவர்கள் பஞ்சமீக்கு முன்பும், நந்தா திதிகளான பிரதமை, சஷ்டி, ஏகாதசி திதிகளிலும், சதுர்தசியன்றும் வெள்ளிக்கிழமை, கர்த்தா மற்றும் அவரின் மனைவியின் ஜன்ம நக்ஷத்திரம் முதலான நாட்களில் ஒரு நாள் மட்டும் செய்யும் மஹாளயம் செய்யக்கூடாது. மேற்கூறிய நாட்கள், குடும்பத்துடன் வசிக்கும் கிரஹஸ்தனுக்கும், அவருடைய குழந்தைகளுக்கும், செல்வங்களுக்கும் குறைவரும் என்பதால் இந்த நாட்களில் மஹாளய தர்ப்பணம் செய்யக்கூடாது.

**ஒரு நாள் மட்டும் செய்ய உகந்த நாட்கள்:-** அமாவாசை, மஹாவ்யதீபாதம், மஹாபரணி, த்வாதசி திதி, மஹாளய பக்ஷம் நடுவில் வரும் மத்யாஷ்டமீ, கஜச்சாயை ஆகிய நாட்களில் செய்யலாம். இந்த நாட்களுக்கு திதி, நக்ஷத்திரம், கிழமை ஆகியவற்றால் ஏற்படும் எந்த தோஷமும் கிடையாது. நிறைவான பலன் கிட்டும்.

**நடுவில் ஆரம்பித்து செய்வது என்றால்:** பஞ்சமி அல்லது அஷ்டமி அல்லது தசமி அன்று ஆரம்பித்து அமாவாசை வரை தினந்தோறும் பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்யலாம்.

**அவிதவா நவமீ:** பதிவிரதையாக வாழ்ந்து தனது கணவனுக்கு முன்பாகவே சுமங்கலியாக இறந்த பெண்மணிகளுக்கு, மஹாளய பட்சத்தில் வரும் நவமீ திதியன்று மஹாளயம் செய்ய வேண்டும்.

சக்தியுள்ளவர்கள் அன்று முறையாக மஹாளயம் செய்துவிட்டு, அத்துடன், சுமங்கலிப் பெண்களைத் தனது வீட்டிற்கு அழைத்து, அவர்களுக்கு புடவை, ரவிக்கை, மஞ்சள், குங்குமம், தாம்பூலம் தந்து அவர்களை நமஸ்கரித்து அவர்கள் ஆசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**மஹாளய பட்சத்தில் வரும் மஹாபரணியின் சிறப்பு:-** கயா க்ஷேத்தரத்திற்கு யாத்திரைச் சென்று, பல்குனீ நதியில் ,தர்ப்பணம் செய்து, அக்ஷய வடத்தில் பிண்ட தானம் செய்து, கயா ஸ்ரார்த்தம் செய்தால் என்ன பலன் கிடைக்குமோ, அதை மஹாபரணீயன்று, நாம் இருக்கும் இடத்திலேயே செய்யும் இந்த தர்ப்பணத்திற்கு அந்த பலன் உண்டு.

**ஸந்யாசிகளுக்கு மஹாளய தர்ப்பணம்:-** தந்தை (பிதா), தாத்தா ( தந்தையின் தந்தை – பிதாமஹர்), கொள்ளுத் தாத்தா (தாத்தாவின் அப்பா – ப்ரபிதாமஹர்) ஆகிய மூவருக்குள், யார் ஒருவரேனும், ஸன்யாசம் வாங்கிக் கொண்டு இறந்திருந்தால், அவர்களுக்கு, மஹாளய பக்ஷத்தில், துவாதசி திதியன்று, அவர்களுடைய பெயருக்கு முன்னால் "ப்ருஹ்மீபூத" என்று சேர்த்துக் கொண்டு, தர்ப்பணம் செய்ய வேண்டும்.

**துர்மரணம் அடைந்தவர்க்ளுக்கு:** துர்மரணம் ஒருவருக்கு ஏற்பட்டிருந்தால், அவர்களுக்காக, மஹாளய பக்ஷ சதுர்த்தசீயன்று, மஹாளய ஸ்ரார்த்தம் செய்ய வேண்டும். இதற்கு, **சஸ்திரஹத சதுர்தசீ** என்ற பெயர். (இயற்கையாக மரணம் அடைந்த யாருக்கும் சஸ்திரஹத சதுர்தசியன்று மஹாளய ஸ்ரார்த்தம்/தர்ப்பணம், செய்யக்கூடாது.

**தந்தை உயிரோடு இருந்தால்:** கர்த்தாவிற்கு தந்தை உயிரோடு இருந்து, தாயார் இறந்திருந்தாலும் கூட, தந்தை செய்வதாலேயே இறந்த தாயாருக்கும் திருப்தி ஏற்படும் என்பது சாஸ்திரம். ஆகவே, தந்தை உயிருடன் இருக்கும் பொழுது, செய்ய வேண்டியதில்லை.

**தந்தை இறந்துவிட்டால்:** தந்தை இறந்து, தாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தந்தையை இழந்தவர்கள், தனது தந்தைக்கும், தனது வம்சத்தினருக்கும் திருப்தியை ஏற்படுத்தும் வகையில் கட்டாயம் மஹாளய தர்ப்பணம் செய்யத்தான் வேண்டும்.

**ஸபத்னீ மாதா:** ஸபத்னீ மாதா என்பவர், கர்தாவின் தந்தைக்கு இரண்டாவது மனைவி. அதாவது சித்தி. தன்னை பெற்றெடுக்காவிட்டாலும் அவரும் தாய்க்கு சமமானவர். சிறிய தாய்க்கு பிள்ளைகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தான் செய்யும் மஹாளய தர்ப்பணத்தில் தனது தாயுடன், தனது சிறிய தாயாரையும் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**மஹாளயபக்ஷ அமாவாசை:** மஹாளயபக்ஷம் முழுவதும் தினசரி பக்ஷ தர்ப்பணம் செய்பவர்கள், மஹாளய அமாவசையன்று முதலில் எப்பொழுதும் போல் அமாவாசை தர்ப்பணத்தை செய்துவிட்டு, அதன் பின்னர் மஹாளய பக்ஷ தர்ப்பணத்தைச் தனியாகச் செய்ய வேண்டும். மஹாளயபக்ஷத்தில்

ஏதோ ஒரு நாள் மஹாளயம் செய்பவர்கள், மஹாளய அமாவாசையன்று அமாவாசை தர்ப்பணம் மட்டும் செய்தால் போதும்.

**சகோதரர்களிள் பங்கேற்ப்பு:** சகோதரர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து, ஒரே வீட்டில் ஒன்றாகச் செய்யலாம். அப்படி செய்யும் பொழுது, ஒவ்வொருவரும் தனித்தனியாகச் செய்வதே உத்தமம். மஹாளயத்தில் வரிக்கப்படும் பித்ருக்களாகிய அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி போன்றவர்கள் அனைவரும் ஒன்றாக இருந்தாலும், காருணிக பித்ருக்கள் என்பவர்கள், ஒவ்வொருவருக்கும் வேறுபடுவாரகள். மேலும், வரிசை கிரமத்தில் தம்பி மஹாளயம் செய்த பிறகு அண்ணா என்று செய்வது மிக உத்தமம்.

**காருண்ய பித்ருக்கள்:** பெரியப்பா, சித்தப்பா, பெரியம்மா, சித்தி, சகோதரன், சகோதரி, அத்தை, அத்திம்பேர் – அவர்களுடைய பிள்ளைகள், பெண்கள், மாமனார், மாமியார், ஆசார்யன், குரு, சிஷ்யன், நண்பன் முதலானவர்கள் காருண்ய பித்ருக்கள் எனப்படுவர். அவர்களின் கோத்திரம் சொல்லி மஹாளயத்தில் ஸ்ரார்த்தம்/தர்ப்பணம் செய்யும் பொழுது, அவர்களுக்கு திருப்தி உண்டாகிறது.

**மஹாளயபக்ஷம் செய்ய விஷேச ஸ்தலங்கள்:** உதாரணத்திற்கு, இராமேஸ்வரம், மயிலாடுதுறை காவேரி படித்துறை, திருவாரூர் அருகில் உள்ள திலதர்ப்பணபுரி, திருச்சிக்கு அருகில் உள்ள முக்கொம்பு, ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் படித்துறை, திருநெல்வேலி அருகில் உள்ள வகுளகிரி நதிக்கரை, மூன்று நதிகள் சங்கமிக்கும் பவானி, கன்யாகுமரி கடற்கரை, தென்காசி அருகில் உள்ள பாபநாசம், சிவாலய தீர்த்தக்கரை, கும்பகோணம் மகாமகக் குளம், திருக்கழுகுன்றத்தில் உள்ள சங்கு தீர்த்த குளக்கரை போன்ற இடங்கள் தர்ப்பணம் அளிக்க சிறந்த இடங்கள்.

**புண்ணிய க்ஷேத்தரங்களுக்கு செல்ல முடியாவிட்டால்:** புண்ணிய க்ஷேத்தரங்களுக்கு செல்ல முடியாதவர்கள், அவரவர் வசிக்கும் இடத்திற்கு அருகேயுள்ள நீர்நிலைகளில் தர்ப்பணம் செய்யலாம். கடைசி பட்சமாக, இது மாதிரியான வசதிகள் எதுவும் இல்லாதவர்கள், தங்கள் வீட்டிலேயே செய்ய வேண்டும். செய்யாமல் இருக்கக்கூடாது.

**மஹாளயபக்ஷம் செய்வது கட்டாயமா?** சாதரணமாக**,** நாம் செய்யும் அமாவாசை மற்றும் ஷண்ணவதி ஸ்ரார்த்தம்**/**தர்ப்பணங்களில் பிதா மற்றும் மாதா வர்க்கத்தினருக்கு மட்டும் ஸ்ரார்த்தம்**/**தர்ப்பணம் செய்கிறோம்**.** ஒவ்வொரு வருஷமும் பாத்ரபத மாதம் க்ருஷ்ண பக்ஷம் பதினைந்து நாட்களிலும், அதாவது மஹாளயபக்ஷத்தில், மேற்கூறியவர்கள் மட்டுமில்லாமல், சித்தப்பா, சித்தி, மாமா, மாமி, அக்கா, அத்திம்பேர், குரு, சிஷ்யன், ஆசார்யர், நண்பன் ஆகிய எல்லோரும் . நமது இருப்பிடத்திற்கு வருவதாக சாஸ்திரம். ஆகவே, அந்த சமயம் அவர்களது திருப்திக்காக மஹாளய ஸ்ரார்த்தத்தை அனைவரும் கட்டாயம் பார்வணம், ஹிரண்யம், தர்ப்பணம் என்னும் மூன்று முறைகளில், ஏதாவது ஒரு முறையில் செய்ய வேண்டும்.

மேலும், தந்தை, தாய் இவர்களைத் தவிர காருணிக பித்ருக்களுக்கு ஸ்ரார்த்தம், தர்ப்பணம் செய்வதற்கு, வருஷத்தில் ஒரு முறைதான் இந்த வாய்ப்பு கிடைக்கிறது. இதை நழுவ விட்டுவிடக்கூடாது.

**மஹாளயபக்ஷ தர்ப்பணத்தை எப்போது ஆரம்பிக்க வேண்டும்?** தந்தை இறந்த வருடம் முழுவதும், இறந்த தந்தைக்கு தினசரி நித்ய ஸ்ரார்த்தம், மாதா மாதா அமாவாசையன்று தர்ப்பணம், அந்தந்த காலங்களில் மாஸிகம் மட்டும்

செய்தால் போதும், ஆப்திக ஸ்ரார்த்தத்திற்கு பிறகு, மஹாளயபக்ஷ தர்ப்பணம், ஸ்ரார்த்தம், மாத பிறப்பு தர்ப்பணம், ஷண்ணவதி தர்ப்பணங்கள் செய்ய ஆரம்பிக்க வேண்டும். தந்தை முன்பே இறந்து வருடா வருடம் மஹாளயம் செய்யும் கர்தா, தனது தாய் இறந்த வருஷத்தில் மஹாளயம் செய்வதில் தவறில்லை. ஆனால், அதிலும் தாய் இறந்து ஒரு வருடம் முடியாவிட்டால், இறந்த தாய்க்கு வரணம் கிடையாது.

**மஹாளயபக்ஷத்தின் நடுவில் ஸ்ரார்த்தம் வந்தால்:-** .மஹாளயபக்ஷத்தில் ஏதாவது ஒரு நாள் மட்டும் மஹாளயம் அனுஷ்டிக்கும் சமயத்தில், மஹாளயயபக்ஷ நடுவில் பெற்றோரின் (வார்ஷிக) ஸ்ரார்தம் நேர்ந்தால், குறிப்பிட்ட திதியில் ஸ்ரார்த்தம் செய்து விட்டு, அதன் பிறகு வரும் நாடகளில் மஹாளயத்தை செய்ய வேண்டும்.

மஹாளயபக்ஷம் முழுவதும் தர்ப்பணம் செய்பவர்கள், நடுவில் ஸ்ரார்த்தம் வந்தால், மஹாளய ஆரம்பத்தன்றே தர்ப்பணம் செய்ய ஆரம்பித்து, மஹாளயபக்ஷம் முழுவதும் தினசரி தர்ப்பணம் செய்யலாம். நடுவில், பெற்றோர் ஸ்ரார்த்தம் நிகழும் நாளில் மட்டும், ஸ்ரார்த்தம் முடித்துவிட்டு, மஹாளயபக்ஷ தர்ப்பணம் செய்துவிட்டு, அதன் பிறகு, ஸ்ரார்த்தத்துக்கு அங்கமான, ஸ்ரார்த்த அங்க தர்ப்பணம் செய்ய வேண்டும்.

**மஹாளய பக்ஷத்தின் நடுவில் ஷண்ணவதி தர்ப்பணம்:** மஹாளய பக்ஷத்தின் நடுவில் ஷண்ணவதி தர்ப்பணம் வந்தால், அன்றைய தினம் முதலில் ஷண்ணவதி தர்ப்பணத்தைச் செய்துவிட்டு, அதன் பிறகு அன்று செய்ய வேண்டிய மஹாளய பக்ஷ தர்ப்பணத்தைச் தனியாக ஸங்கல்பம் செய்து ஆரம்பித்துச் செய்ய வேண்டும்.

**இறந்து போனவருக்கு வாரிசு இல்லாவிட்டால்:** இறந்து போனவருக்கு குழந்தை இல்லாவிடில், அவருடைய மனைவியானவர், சாஸ்திரிகளிடமே தர்ப்பணம் செய்யச் சொல்லலாம். இதேபோல், ஆண் வாரிசு இல்லாதவர்கள், அந்த வீட்டின் பெண் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்காக, வேறு ஒருவரை நியமித்துக் கடமையை நிறைவேற்றலாம்.

**அனாதைகளுக்கு:** தர்ப்பணம் முடிந்ததும் நிறைவாக, **"ஏஷாம் ந மாதா ந பிதா ந பந்து ந அந்யகோத்ரிண: தே ஸர்வே த்ருப்தி மாயாந்து மயோத் ஸ்ருஷ்டை: குசோதகை"** என்று மந்திரம் சொல்வார்கள். எவர் ஒருவருக்கு தாய், தந்தை, பங்காளி, நண்பர்கள் என்று இது போல்; யாருமே இல்லாத அனாதை என்று சொல்லக்கூடியவர்களுக்கும், நான் அளிக்கும் இந்த எள்ளும் ஜலமும் திருப்தியை அளிக்கட்டும்" என்று ஜாதி, மத பேதமற்று உலகின் அனைத்து ஜீவராசிகளும் நன்மை அடைய வேண்டும், என்று பிராத்தனை செய்யச் சொல்கிறது நமது சாஸ்திரம்.

**மஹாளயத்தில் சாப்பாடு:** பொதுவாக, ஹிரண்ய ஸ்ரார்த்தம், தர்ப்பணம் என்னும் கர்மா முழுமையாக முடிந்த பிறகுதான் சாப்பாடு போடப்படுகிறது. இந்த சாப்பாடு, பித்ருக்களின் ப்ரீதிக்காகத்தான் போடப்படுகிறது. ஆகவே, அவரவர் குடும்ப ஸ்ம்பிரதாயப்படி, ஸ்ரார்த்த சமையல் போல, விலக்க வேண்டிய பொருட்களை விலக்கி, ஸ்ரார்த்த சமையல் செய்து சாப்பாடு போடுவதே உசிதம்.

# வம்ஶ-பித்ருக்கள்

| அப்பா வழி கோத்ரம்: | | | |
|---|---|---|---|
| எண் | உறவு | உறவு ஸமஸ்கிருத்த்தில் | ஸர்மா |
| 1 | தந்தை | பிதா | |
| 2 | தந்தையின் தந்தை | பிதாமஹர் | |
| 3 | (தாத்தாவின் அப்பா) | ப்ரபிதாமஹர் | |
| 4 | தாய் | மாதா | |
| 5 | தந்தையின் அம்மா | பிதாமஹீ | |
| 6 | அப்பா வழித் தாத்தாவின் அப்பாவின் அம்மா | ப்ரபிதாமஹீ | |
| மாத்ரு வர்க கோத்ரம் | | | |
| 1 | தாயின் தந்தை | மாதா மஹர் | |
| 2 | தாயாரின் அப்பாவின் அப்பா | மாது: பிதாமஹர் | |
| 3 | தாயாரின் அப்பாவின் தாத்தா | மாது: ப்ரபிதாமஹர் | |
| 4 | தாயின் அம்மா | மாதாமஹீ | |
| 5 | தாயாரின் அப்பாவின் அம்மா | மாது: பிதாமஹீ | |
| 6 | தாயாரின் அப்பாவின் பாட்டி | மாது: ப்ரபிதாமஹீ | |

**குறிப்பு:** தாயார் இருந்தால், மாதாவை விட்டு விட்டு, பிதாமஹீ, பிது: பிதா மஹீ, பிது: ப்ரபிதா மஹீ என்று மாற்றிச் சொல்லிக் கொள்ள வேண்டும்.